www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

16–31 ஜூலை '89

3 _ 17

விலை ரூ. 1

ர்க்சிய-லெனினிய அரசியல் ஏடு




படிப்பகம்

www.padippakam.com



# ஆசிரியர் அரசு ஊழியர்களே சொந்த பலத்தை நம்பி மக்களோடு ஐக்கியப்படுங்கள்!

மூன்றாவது வாரத்தைத் தாண்டி முன்னேறிக் கொண்டிருக்கிறது ஆசிரியர்—அரசு ஊழியர் போராட்டம். ஒரு பகுதியினரிடையே மிதமான முறையில் தொடங்கிய வேலை நிறுத்தம், இதுவரை வேலை நிறுத்தம்—போராட்டங்களையே கண்டிராத பிரிவினரிடையேயும் பரவியது. நகராட்சித் துப்புரவுப்பணியாளர்களில் இருந்து பொறியியலாளர்கள்வரை சகல பகுதியினரிடையேயும் பரவியது. அடக்கு முறைகள், அச்சுறுத்தல்கள், ஆசை வார்த்தைகள், பிளவு—சதிகள், சமரச முயற்சிகள், அவதூறுகள் அனைத்தையும் எதிர் கொண்டு முறியடித்து முன்னேறுகிறது.

கவர்னரது ஆட்சியைச் சுற்றி பத்திரிக்கைளும் பச்சோந்திகளும் பின்னிய பிரமைகள் கலைகின்றன. **வழக்கமான அதிகார வர்க்க கெடுபிடி, வரட்டுத்தனம் தவிர எந்தவொரு பிரச்சினையையும்** தீர்க்க வக்கற்றது கவர்னர் ஆட்சி என்பது நிரூபிக்கப்பட்டு வருகிறது. பாசிச எம்ஜிஆரின் பாணியிலேயே இரும்புக்கரங் கொண்டு ஒடுக்குவது, போராடுபவர்களுக்கு எதிராய் ''பொது மக்களை''த் தூண்டிவிடுவது, இழுத்தடித்து பிசுபிசுக்க வைப்பது என்கிற உத்திகளைத்தான் அதிமேதவி அலெக்சாண்டரும் பின்பற்றுகிறார்.

ஆனால் எதற்கும் அஞ்சாது, அடிபணியாது தொடர்ந்து போராடும் ஆசிரியர்—அரசு ஊழியர்களின் அணியில் புதிய புதிய பிரிவினர் இணைகிறார்கள். சில அரசு ஊழியர்களின் லஞ்ச—ஊழல், அதிகார முறைகேடு காரணமாகவும் சில ஆசிரியர்களின் பொறுப்பற்ற போக்கு காரணமாகவும் அனைவருக்கும் எதிராக தற்போது பொது மக்களிடம் காணப்படும் சில பாதகமான கண்ணோட்டத்தைக் களைவது, போராட்டத் தீவிரப்படுத்துவது என்று அவர்கள் முடிவுசெய்துள்ளனர். இதற்காகத் தெருமுனை கூட்டங்கள், அரசு உத்திரவு எரிப்பு ஆகியவற்றிற்குத் திட்டமிட்டுள்ளனர். நகராட்சி ஊழியர்களின் வேலை நிறுத்தம் காரணமாகக் குவிந்து கிடக்கும் குப்பை, இருண்டு கிடக்கும் தெருக்கள், கடைநிலை ஊழியர் வேலை நிறுத்தம் காரணமாக மருத்துவமனைகளின் அவலங்களைக் காட்டி, மக்கள் சிரமங்களைக் காட்டி போராட்டத்தைமுறியடிக்க முயலுகிறது அரசு அத்தியாவசியப் பணித்துறை சட்டத்தைபோராடுபவர்களுக்கு எதிராக ஏவிவிடப் போவதாக மிரட்டுகிறது. அத்தியாவசியப் பணியில் இருப்பவர்களுக்கு நியாயமான கோரிக்கைகளை ஏற்காது அடக்க முயலும் அரசுதான் மக்கள் விரோதமானது. மின்துறை, சத்துணவு, குடிநீர்—பால் வழங்கும் துறை போன்றவற்றுக்கு வேலை நிறுத்தத்திலிருந்து விலக்கு அளித்து அரசின் பல்லைப் பிடுங்குகிறார்கள் போராடுபவர்கள்.

போராடும் ஆசிரியர்—அரசு ஊழியர்கள் எல்லா ஓட்டுக் கட்சிகளினுடைய ஆதரவையும் கோருகின்றனர். பெரிய ஓட்டுக் கட்சிகள் எல்லாம் தாம் ஆட்சியிலிருந்த போது அவர்களின் நியாயமான கோரிக்கையை நிராகரித்து போராட்டங்களை ஒடுக்கியவர்கள் தாம். ஆனால் வரவிருக்கும் தேர்தலில் ஓட்டுப் பொறுக்குவதற்காக பொய்யான வாக்குறுதிகளும் ஆதரவும் தருகிறார்கள். போராட்டத்திற்கு பின்னிருந்து தலைமையேற்கும் போலிக் கம்யூனிஸ்டுகள்கூட சமயம் வரும்போது சமரசம் செய்து கொண்டு காட்டிக் கொடுக்கக் கூடியவர்கள்தான். சென்ற ஆண்டு அகில இந்திய ரீதியில் கல்லூரி ஆசிரியர் போராட்டத்தை இவர்கள்காட்டிக் கொடுத்ததை மறந்துவிடக் கூடாது. எனவே நியாயமான கோரிக்கைக்காகப் போராடும் **ஆசிரியர்களும் அரசுஊழியர்களும் தமது சொந்த பலத்தை நம்பி உறுதியாக நின்றால் மட்டுமே வெற்றி பெற முடியும்.**

## போலிகளின் கோழைத்தனம்

கடந்த 29.6.98 அன்று தஞ்சையில் நகராட்சி அலுவலகம் முன்பாக போராடும் ஆசிரியர்களும் அரசு ஊழியர்களும் தம் குடும்பத்துடன்—ஏறத்தாழ 1500 பேர் உண்ணாவிரதமிருந்தனர். இந்த உண்ணாவிரதத்தை முடித்து வைத்துப் பேசுமாறு மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் சார்பில் என்னை அழைத்திருந்தனர்.

போராட்டத்தை ஆதரித்துப் பேசிய நான் ஆசிரியர்—அரசு ஊழியர்கள் மத்தியிலுள்ள சமூகப் பொறுப்பின்மையைச் சுட்டிக் காட்டினேன். மேலும் சம்பளக் கோரிக்கைக்காகப் போராடும் இந்நேரத்தில் 59வது அரசியல் சட்டத் திருத்தத்தின்மூலம் உயிர் வாழும் அடிப்படை உரிமை பறிக்கப்பட்டு பாசிச அபாயம் பெருகியுள்ளதையும், அதற்கெதிராகப் போராட வேண்டிய அவசியம் குறித்தும் பேசிவிட்டு போராட்ட நிதியாக ரூ 10 அளித்தேன். எனது உரையை நிறைய பேர் பாராட்டிச் சென்றனர்.

ஆனால் வருவாய்துறை ஊழியர் சங்கத்தைச் சேர்ந்த 'மார்க்சிஸ்ட்' கட்சி ஆதரவாளர்களான ராஜகோபாலன் மற்றும் சிலர், 'எவ்வாறு ம.க.இ.க.வினரைப் பேச வைக்கலாம். அவர்களது பேச்சையெல்லாம் இரகசியப் புலனாய்வுத் துறையினர் கடுமையாகக் கருதுவர்; அரசு நம்மீது ஆத்திரமடையும்' என்றெல்லாம் அலித்தனமாக வாதிட்டுள்ளனர். ஆசிரியர் கூட்டமைப்பின் மாவட்ட அமைப்பாளர் பெரியசாமி, 'ஒவ்வொருவரும் தமது கருத்தைச் சொல்ல உரிமை உண்டு. மகஇகவை அனுமதித்தே ஆக வேண்டும்' என்று உறுதியாகக் கூறிஅவர்களின்வாயடைத்துள்ளார்.

அரசின் ஆத்திரத்துக்கு ஆளாகாமல் போராட உபதேசிக்கும் இப்போலிக் கம்யூனிஸ்டுகள்தான் போராடும் ஆசிரியர்—அரசு ஊழியர்களின் ஒரு பிரிவுக்குத் தலைமை தாங்குகின்றனர் புரட்சிகர அமைப்புகளைக் கண்டு மிரண்டு உரை நிகழ்த்தக்கூட திட்டமிட்டுத் தடுக்கும் இந்த வாய்ச்சொல் வீரர்களைப் போராடும் ஆசிரியர்களும் அரசு ஊழியர்களும்இனங்கண்டுகொள்ள வேண்டும்.

—காளியப்பன்
மக்கள் கலை இலக்கியக் கழகம்,
தஞ்சை கிளை.



படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

மூன்றாமாண்டு

17

16—31 ஜூலை '88

உள்நாடு
தனி இதழ் : ரூ. 1
ஆண்டு சந்தா : ரூ 24

வெளிநாடுகள்
(விமானத் தபாலில்)
தனி இதழ் : ரூ 6
ஆண்டு சந்தா : ரூ 144

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்

எஸ். மதியழகன்
ஆசிரியர், 'புதிய ஜனநாயகம்'
21, பாலாஜிசிங் தெரு
சைதாப் பேட்டை
சென்னை-600 015.

## ஈரானியப் பயணிகள் விமானத் தகர்ப்பு
# அமெரிக்காவின் அரக்கத்தனம்

நிகரகுவா சுதந்திர அரசைக் கவிழ்க்க எதிர்ப்புரட்சி குண்டர்களை ஏவியும், லிபியாமீது தாக்குதல் தொடுத்தும் வெறியாட்டம் போட்டு வந்த அமெரிக்க ஏகாதிபத்தியம் இப்போது பாரசீக வளைகுடாவில் இன்னுமொரு பயங்கரவாத நடவடிக்கையை அரங்கேற்றியுள்ளது. பாரசீக வளைகுடாவில் கடந்த ஓராண்டுக்கும் மேலாகப் போர்க் கப்பல்களை நிறுத்தி ஈரான்மீது அடுத்தடுத்து தாக்குதல் தொடுத்து வந்த அமெரிக்க ஏகாதிபத்தியம் கடந்த ஜூலை 3ம் நாளன்று 298 பேரைக் கொண்ட ஈரானியப் பயணிகள் விமானத்தைச் சுட்டு வீழ்த்தி தனது காட்டுமிராண்டித்தனத்தை மீண்டுமொரு முறை உலகிற்குக் காட்டியுள்ளது.

ஹெர்மஸ் ஜலசந்தி அருகே நடந்த இப்படுகொலையில் பச்சிளம் குழந்தைகள் உள்ளிட்ட பயணிகள் அனைவரும் மாண்டு போயினர். கடற்பரப்பில் கொத்துக் கொத்தாய் மனிதச் சடலங்களே மீன்கூட்டம் போல மிதந்தன. மீட்கப்பட்ட சடலங்களை ஈரானிய அரசு அடக்கம் செய்தபோது, பல்லாயிரக்கணக்கான ஈரானிய மக்கள் வீதிகளிலே ஊர்வலமாகத் திரண்டு ஆராத் துயரத்தின் நடுவே அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கெதிராக ஆர்த்தெழுந்து முழக்கமிட்டனர். உலகெங்கும் ஏகாதிபத்திய எதிர்ப்புஜனநாயக சக்திகளும் மனிதாபிமானிகளும் அமெரிக்காவின் பயங்கரவாதத்தைக் கண்டித்து அமெரிக்கத் தூதரங்கள்முன் ஆர்ப்பாட்டங்களைத் தொடர்கின்றனர்.

உலகமே காறி உமிழும் கண்மூடித்தனமான இக்காட்டுமிராண்டித்தனத்தை நடத்திய அமெரிக்கக் கடற்படையினர், ''அந்த ஈரானிய விமானம் விமானப் பாதையை விட்டு விலகி தாழ்வாகப் பறந்து வந்தது. நாங்கள் எச்சரிக்கைகளை அனுப்பினோம். ஆனால் பதில் இல்லை. அது எங்களை நெருங்குவதற்கு இன்னும் 4, 5 நிமிடங்களே இருந்தன. உடனடியாக முடிவு எடுக்க வேண்டிய நிலையில் அது எதிரி விமானம் எனக் கருதி தற்காப்பிற்காக ஏவுகணைகளைச் செலுத்தி அந்த விமானத்தைச் சுட்டுவீழ்த்தினோம். பின்னர்தான் அது பயணிகள் விமானம் எனத் தெரிந்தது. நடந்துவிட்ட தவறுக்காக மிகவும் வருந்துகிறோம்.என்று நியாயவாதங்களை முன்வைக்கின்றனர். அமெரிக்க அதிபர் ரீகன், மிகவும் வருந்துவதாகவும், விசாரணை நடத்தி உண்மையைக் கண்டறியப் போவதாகவும் நாடகமாடுகிறார்.

இது தற்காப்பு நடவடிக்கையில் ஏற்பட்ட தவறுதானா? இல்லை. காட்டுமிராண்டித்தனமான வெறியாட்டம்! தூரத்தே வரும் விமானம் எத்தகையது என்று முன்கூட்டியே அறிவிக்கும் சக்தி வாய்ந்த ராடார் கருவிகளை வைத்துக் கொண்டு, பயணிகள் விமானத்தைப் போர் விமானம்என்று கருதியதாக அப்பட்டமாகப் புளுகிறது அமெரிக்க கடற்படை. அப்படியே ஒருக்கால் ராடார் கருவி பழுதடைந்திருந்தாலும் வேறு எத்தனையோ வழிகளில் தற்காப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கமுடியும். போர்வெறி பிடித்தலையும் ஏகாதிபத்தியங்களிடம் கிஞ்சித்தும மனிதாபிமானத்திற்கு இடமில்லை. எனவேதான் இந்த வளைகுடா அவலத்திற்குப் பின்னரும கூட, அப்பகுதியிலிருந்து எமது போர்க் கப்பல்களை ஒருபோதும் விலக்கிக் கொள்ள மாட்டோம் என்று திமிரோடு கொக்கரிக்கிறது அமெரிக்க ஏகாதிபத்தியம்.

உலக மக்கள்முன் அமெரிக்கா அம்பலப்பட்ட நிலையில், ரசிய சமூக ஏகாதிபத்தியமும் இந்த வன்செயலுக்குக் கண்டனம் தெரிவித்து கூட்டத்தோடு சேர்ந்து கோவிந்தா போட்டு முற்போக்கு நாடகமாடுகிறது. உலக சமாதானம் பற்றி உரக்கக் கூச்சலிட்டுக் கொண்டே வளைகுடா பிராந்தியத்தில் தனது மேலாதிக்கத்தை நிலைநாட்ட அமெரிக்காவுக்குப் போட்டியாக ஓமான் அருகே போர்க் கப்பல்களை நிறுத்தி வைத்துள்ளது. ஏற்கனவே நான்காண்டுகளுக்கு முன்பு தென்கொரிய பயணிகள் விமானத்தைச் சுட்டு வீழ்த்திய இக்காட்டுமிராண்டிகள் இப்போது அமெரிக்கா பசப்புவதைப் போலவே தற்காப்பு நடவடிக்கைதான் என்று நியாயப்படுத்தினர். லேபிள்கள் மாறியிருந்தாலும் ஏகாதிபத்தியங்களின் தன்மை என்றும் மாறிவிடாது.

கம்யூனிச-எதிர்ப்பு, அஞ்ஞானவாத சர்வாதிகார ஆட்சியை ஈரான் கொண்டிருந்தாலும் அது ஏகாதிபத்திய எதிர்ப்பில் உறுதியாக நின்று வளைகுடா பகுதியில் ரசிய அமெரிக்க மேலாதிக்க வல்லரசுகளுக்கு கிலியூட்டிவருகிறது. அமெரிக்கா தனது அதிரடித் தாக்குதல்களால் ஈரானை நிலைகுலைய வைத்த போதிலும், ஈரானும் சளைக்காமல் பதிலடி கொடுத்து வருகிறது. பேரிழப்புகளினூடே ஈரான், ''அமெரிக்க சைத்தான்எங்களிடமிருந்து தப்பிவிட முடியாது. இப்படுகொலைகளுக்குப் பழிவாங்கியே தீருவோம். வினை விதைத்தவர்கள் அதை அறுவடை செய்தேயாக வேண்டும்'' என்று சூளுரைத்திருக்கிறது. இது ஏதோ உணர்ச்சி வேகத்தில் கொட்டிய வார்த்தைகள் அல்ல. உலக மக்களிடம் அம்பலப்பட்டு தனிமைப்பட்டு போயுள்ள அமெரிக்க மேலாதிக்க வெறியர்களுக்கு எதிரான உலக மக்களின் வெஞ்சின அலைகள் தடுக்கப்பட முடியாதவை. அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கும் அதன் அடிவருடிகளுக்கும் எதிரான உலக மக்களின் போராட்டம்மகத்தான வெற்றியைப் பெறுவது நிச்சயம்!

படிப்பகம்

www.padippakam.com

# தேவிலால் ஆட்சியின் அக்கிரமம்

**பா**சிச ராஜீவ் கும்பலுக்கு எதிராக அகிம்சைக் கடலில் மூழ்கி ஜனநாயக முத்தெடுக்கும் எதிர்க் கட்சி படையணி வரிசையில் முக் கியமானவர் தேவிலால். இவர் லோக்தள கட்சியின் முன்னணி தலைவர். அரியானா மாநிலத் தின் தற்போதைய முதல்வர். எதிர்க்கட்சித் தலைவர்களால் 'சௌத்திரிசாகிப்' என்று பெருமை யுடன் அழைக்கப்படும் தேவிலால் தமிழ்நாட்டின் நிலமுதலை கருப் பையா (மூப்பனார்) மாதிரி, பல பத்து மடங்கு பினாமி நிலங்களுக் குச் சொந்தக்காரர். நேரு—இந் திரா—ராஜீவ் மாதிரி பரம்பரை ஆட்சியை அரியானா மாநிலத் தில் தொடர தம் குடும்பத்தின் மொத்த உறுப்பினர்களும் ஆளுக் கொரு அரசாங்க பதவி கொடுத்து ஆட்சிக் கட்டிலில் அமர்ந்திருப் பவர்.

இம்மாதிரியான இவருடைய காங்கிரசு எதிர்ப்பு 'தர்ம' யுத்தத் தில் உடன்வர மறுக்கும் எவரும் இவருடைய பார்வையில் காங் கிரசு ரௌடிகள்.

சௌதலா; பஞ்சாப்—ராஜஸ் தான் எல்லையில் இருக்கும் இச் சிறு நகரம் தேவிலாலின் பூர்வீ கம். 20,000க்கும் மேற்பட்ட மக்கள் தொகையைக் கொண்ட இச்சிறு நகரமும் அதைச் சுற்றி யுள்ள 20க்கும் மேற்பட்ட கிராமங் கள் அனைத்தும் தேவிலால் குடும் பத்தின் பினாமி சொத்துக்கள் குவிந்திருக்கும் இடம். அக்குடும் பத்தின் நேரடிக் கண்காணிப்பில் நிர்வகிக்கப்படும் குட்டி சமஸ் தானம். இப்பகுதியில் வசிக்கும் அரிசனங்களில் சுமார் பத்துக்கும் மேற்பட்ட கிராமங்களிலிருப்பவர் கள் சென்ற தேர்தலில் மொத்த மாக தேவிலாலின் லோக்தள் கட் சிக்கு எதிராக காங்கிரசுக் கட் சிக்கு வாக்களித்தனர்.

விளைவு, தேவிலால் தேர்த லில் வெற்றி பெற்று முதன் மந்திரி யாக பதவியேற்றவுடன் பழி வாங்கும் படலத்தை முழு அள வில் அரங்கேற்றினார்.

தேவிலாலின் புத்திரர்கள் ஓம்பிரகாஷ் சௌத்லா, பிரதாப் சிங், ரஞ்சித்சிங், ஓம்பிரகாஷ் சௌத்லாவின் மகன் அபாய்சிங், பிரதாப் சிங்கின் மகன் ரவி என பெரிசுகள் முதல் பேரன்கள் வரை கொலை வெறியோடு களத்தில் இறங்கினர். இவர்களுக்கு உடந் தையாக அவ்வட்டாரத்தின் போலீசு உயர் அதிகார கும்பல் துணைக்கு வர காட்டு தர்பார் அரங்கேறியது.

காங்கிரசுக்கு ஒட்டளித்தவர் கள் மட்டுமல்ல, தேவிலால் குடும் பத்தின் விசுவாசிகள், அப்பாவி கூலி ஏழைகள் என அனைத்து தரப்பினரும் இக்கும்பலின் கொலை வெறித் தாக்குதலுக்கும், சூறையாடலுக்கும் இரையானார் கள். பீதியடைந்தவர்கள், அண் டை நகரங்கள், மாநிலங்களை நோக்கி ஓடுகிறார்கள். சென்ற இடத்திலேயே சிலர் நிரந்தரமாக குடியேறிவிட்டனர். வேறு சிலர் மாதத்திற்கு சில நாட்கள் இர வோடு இரவாக வந்து தனிமை யில் விட்டுச் சென்ற தம் குடும்பத் தினரை பார்த்துவிட்டுச் செல்கின் றனர். மொத்தத்தில், தேவிலால் கும்பலின் கொள்ளைக் கூட்டத் தால் எந்நேரத்திலும் தாக்கப்பட லாம் என்ற பீதியினூடே மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

வெளியேறிய மக்களின் வாயி லாக இச்செய்தியை அறிந்து, தகவலறிய அக்கிராமங்களுக்குச் சென்ற பத்திரிக்கையாளர்கள் 'எஞ்சியிருக்கும் மக்கள் எங்களி டம் வாய் திறந்து பேசவே அஞ்சு கின்றனர். சோகம் கப்பிய முகத் துடன் கதவிடுக்கில் நின்று கொண்டு மிரட்சியுடன் பார்க்கின் றனர்' என்கின்றனர்.

ரஞ்சித் கோட்டியா; தேவி லால் மகன் ரஞ்சித் சிங்குடன் ஒரே வகுப்பில் படித்தவர்; நீண்ட நாள் நண்பர். இருந்தாலும் என்ன? முதல்வாமகனுக்கு அதெல் லாம் நினைவு இருக்குமா என்ன? 'கான்ட்ராக்ட்' தொழில் செய்யும் இவரை காங்கிரசுக்காரன் என முத்திரை குத்தி 18 நாட்கள் சிறையிலடைத்து சித்திரவதை செய்தனர். 'சிகரெட்' நெருப்பால் அவரது உடம்பை சுட்டனர். இருந்தும் அவர் பழைய நட்பை நினைத்துக் கொண்டு நேரிடை யாக தேவிலாலிடம் புகார் செய்ய சென்றார். தேவிலாலோ இவரது பேச்சை காது கொடுத்தும் கேட் காமல், நீ ஒரு காங்கிரசுக்கார னா? உன் வீட்டில் காங்கிரசுக் கொடி கூட ஏற்றி வைத்திருக் கிறாயா?'' என்று சீறியிருக்கிறார். பயந்து போன ரஞ்சித் கோட் டியா நீண்ட நாட்களாக வீர்பக்க மே திரும்பவில்லை.

ராம்சந்தர் கோட்டியா, 56 வயது விவசாயி. இவர் பத்திரிக் கையாளர்களிடம் பேசவே அஞ்சு கிறார். அடியாளுடன் வந்த ரவி இவரது மூத்த சகோதரரை வீடு புகுந்து படுகொலை செய்திருக் கிறான். இவரோ ரவியின் தகப் பன் ஓம்பிரகாஷிடம் நீதி கேட்க சென்றிருக்கிறார். அவனோ, ''நான் மட்டும் அங்கு இருந்திருந் தால் உங்கள் அனைவரையும் கொன்றிருப்பேன்'' என்று திண வெடுத்து பேசி அவரை துரத்தி யிருக்கிறான்.

மீராதேவி, 70 வயது மூதாட்டி. இவர் குடும்பத்துக்கு சொந்தமான மனையை அடா வடித்தனமாக ஆக்கிரமித்துக் கொண்டது தேவிலால் தலைமை யில் இயங்கும் கொள்ளைக் கூட் டம். நியாயம் கேட்ட இம்மூதாட் டியை, ரவி தலைமையிலான ரௌடிக் கும்பல் நடுத்தெருவில் வைத்து உதைத்து ஏசியிருக் கிறது. அவரது கணவரை சிறையி லடைத்தது பீதியடைந்த இவரது மகன் வெளியேறி தப்பித்திருக் கிறார். மருமகளையும் பேரக் குழந்தைகளையும் வைத்துக் கொண்டு இப்போது தனிமையில்



தேவிலால் கொள்ளைக் கூட்டத்திடம் நிலத் தைப் பறிகொடுத்த வறுமை ராம்.

www.padippakam.com

உழலுகிறார் இம்மூதாட்டி. தாக்குதலில் தப்பித்த மகன் எப்போதாவது இரவு நேரத்தில் வந்து தம் குழந்தைகளை பார்த்துவிட்டு தலைமறைவாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

போலீசு — தேவிலால் குடும்பத்தின் ரௌடித்தனத்தால் இவர்களைப் போல் நூற்றுக்கணக்கான குடும்பங்கள், கணவனைப் பிரிந்து, மகனைப் பிரிந்து, உடமைகளை இழந்து வெளி மாநிலங்களுக்கு ஓடி சிறுக சிறுக செத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆண்டாண்டு காலமாக அனுபவித்த நிலத்தை பறிகொடுத்த 80 வயது விவசாயி உமாராம். பஞ்சாயத்து தேர்தலில் போட்டியிட உள்ளூர் மக்களால் முன்மொழியப்பட்ட 62 வயது கூலி ஏழை அரிசன விவசாயி, தம் விளைச்சலை பறிகொடுத்து விட்டு பிழைக்க வழியில்லாமல் அண்டை மாநிலத்திற்கு ஓடிவிட்ட 42 வயது விவசாயி ராம்கிஷன், போலீசு—தேவிலால் குடும்பத்தின் ரௌடித்தனங்களை வெளி உலகுக்கு தெரிவித்த கொபேரா, அவருக்கு துணை நின்ற சியோ பட் ஜாகர் இப்படி எண்ணற்றவர்கள் தேவிலால் ரௌடிகளால் மிருகத்தனமாக தாக்கப்பட்டு வாழ்க்கையை பறிகொடுத்துள்ளனர்.

மீராதேவி ; தேவிலால் தலைமையில் இயங்கும் கொள்ளைக் கூட்டம் நியாயம் கேட்ட இம் மூதாட்டியை நடுத்தெருவில் உதைத்தது.



போலீசு கும்பலோ, இவர்கள் சூதாட்ட விடுதி நடத்தியதாக, மோசடி செய்ததாக, குடித்து விட்டு கலாட்டா செய்ததாக, கலவரத்தில் ஈடுபட்டதாக, சட்ட விரோதமாக ஆயுதங்கள் வைத்திருந்ததாக இவர்கள் மீது பல்வேறு பொய் வழக்குகள் போட்டு இவர்களை நிரந்தரமாக குற்றவாளிகள் பட்டியலில் வைத்துக் கொண்டு மிரட்டிக் கொண்டிருக்கிறது.

பாசிச ராஜீவை வீழ்த்திவிட்டு எதிர்க்கட்சியினர் அரியானாவில் கொண்டு வந்திருக்கும் 'ஜனநாயக' ஆட்சியின் யோக்கியதை இதுதான். இம்மாதிரியான ஆட்சியை இந்தியா முழுவதும் நிலைநாட்டத்தான் எதிக்கட்சியினர் இப்போது கூட்டணிசேர்ந்துஓட்டு பொறுக்க கிளம்பிவிட்டார்கள்.

● பச்சையப்பன்

## வகுப்பறையா? வன்முறை களமா?

விமான நிலையங்களில் விமானக் கடத்தல்காரர்களைப் பிடிக்கவும், பாராளுமன்றம் மற்றும் பிற இடங்களில் பிரதமர், ஜனாதிபதி முதலான முக்கிய புள்ளிகளுக்குப் பாதுகாப்பளிக்கவும் 'மெட்டல் டிடெக்டர்' எனும் கருவியை வைத்து அனைவரையும் சோதிப்பதென்பது இன்றைய நடைமுறையாகிவிட்டது. துப்பாக்கி, கத்தி முதலான எந்த ஆயுதம் வைத்திருந்தாலும் இந்தக் கருவி ஒலியெழுப்பிக் காட்டிக் கொடுத்துவிடும். இப்போது பள்ளிகளிலும் அந்தச் சோதனை புகுத்தப்பட்டுள்ளது. எங்கே? சிவசங்கரி, மணியன், உதயமூர்த்தி கும்பல்களால் உலகின் நாகரீக மிக்க நாடு என்று பீற்றிக் கொள்ளப்படும் அமெரிக்காவில் தான்!

சமீப காலமாக அமெரிக்கப் பள்ளிக் கூடங்கள் அராஜகத்துக்கும் வன்முறைக்கும் போதை மருந்துக்குமான களமாகிவிட்டது. கடந்த ஆண்டு மட்டும் வகுப்பறைகளில் 1500க்கும் மேலான ஆயுத தாக்குதல்கள் நடந்துள்ளன மாணவர்கள் துப்பாக்கியுடன் பள்ளிக்கு வந்து சக மாணவர்களைச் சுடுவதும், கத்தியால் குத்துவதுமான வன்முறைகள் பெருகிவிட்டன. ஆயுதங்கள் கிடைக்காதவர்கள் பந்து மட்டையால் மண்டையைப் பிளக்கின்றனர். இந்த ஆண்டு மட்டும் ஆயிரத்துக்கும் மேலான ஆசிரியர்கள் மாணவர்களால் பயங்கர ஆயுதங்களைக் கொண்டு தாக்கப்பட்டுள்ளனர். இவர்களில் குறைந்தது 100 பேர் படுகாயமுற்று மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

ஏழு—எட்டு வயதுள்ள இளஞ் சிறுவர்கள்கூட வன்முறைக்கும் போதைக்கும் பழகிப் போய் விட்டார்கள். ஆசிரியர்களோ மாணவர்களின் வன்முறை வெறியாட்டத்தைக் கண்டு ஒரு புறம் பீதியடைகின்றனர். மறுபுறம், இளம் தலைமுறை இப்படி சீரழிவதைக் கண்டு மனம் வெதும்புகின்றனர். எனவேதான் மீண்டும் பள்ளிகள் திறக்கும் இப்பருவத்தில் வகுப்பறைகளில் 'மெட்டல் டிடெக்டர்' கருவியை வைத்து ஒவ்வொரு சிறுவனையும் பரிசோதித்து உள்ளேவிட (அநாக)ரீகன் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதோடு வன்முறையிலீடுபடும் மாணவனை பள்ளியிலிருந்து உடனடியாக நீக்கம் செய்யும் புதிய உத்தரவையும் அறிவித்துள்ளது.



'ராம்போ'வின் வீர சாகசங்களைக் காட்டி உள்நாட்டில் தேசிய வெறியையும் ஆக்கிரமிப்பு வெறியையும் இளம் தலைமுறையிடம் ஊட்டி வளர்க்க முயற்சித்தது ரீகன் கும்பல். ஆனால் அது பிள்ளையார் பிடிக்க குரங்கான கதையாக இளம் தலைமுறையை வன்முறை—அராஜக வாதிகளாக வெகு விரைவிலேயே வளர்த்து விட்டுள்ளது. 'ஏகாதிபத்திய வாதிகள் கல்லொன்றைத் தூக்கி காலில் போட்டுக்கொள்ளும் முட்டாள்கள்' என்று தோழர் மாவோ கூறியது மிகச் சரியானது என்பதை மீண்டும் ரீகன் கும்பல் நிருபித்துக் காட்டியுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

# பாசிச ராஜீவ் வந்தாலும் கைது

## அவரின் பாதந்தாங்கி கவர்னர் வந்தாலும் கைது.



**பா**சிச ராஜீவும் அவரது பரிவாரங்களும் தமிழகத்திற்கு உல்லாசப் பயணம் வரும்போதெல்லாம், பாதுகாப்பைக் காரணம் கட்டி சகல தரப்பு மக்களையும் கைது செய்து சிறையில் அடைப்பது வாடிக்கையாகிவிட்டது. குறிப்பாக, புரட்சிகர அமைப்பை சேர்ந்த தோழர்களை பழிவாங்குவதற்கு போலீசு கும்பல் இதையொரு ஆயுதமாகவே பயன்படுத்துகிறது.

சென்னையில் நடந்த காங்கிரசு மாநாட்டில் கலந்துக் கொள்ள பாசிச ராஜீவ் வந்தபோது, சம்பந்தமே இல்லாமல் திருச்சி, தஞ்சை, திருவையாறு, திருவோணம் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் கலை இலக்கியக் கழகம், விவசாயிகள் விடுதலை முன்னணி தோழர்களை நடு இரவில் கைது செய்து பொய் வழக்கு ஜோடித்து சிறையில் அடைத்தது போலீசு கும்பல். சென்ற மாதம் பழநி முருகனை தரிசிக்க வந்த ராஜீவுக்கு பாதுகாப்பு தர மதுரை உசிலம்பட்டி விவிமு தோழர்கள் வழக்கம் போலவே நள்ளிரவில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். அப்போது தங்களுக்கு இழைக்கப்பட்ட சிறைக் கொடுமைகளையும், போலீசு அக்கிரமங்களையும் இங்கு விவரிக்கிறார் ஆரியப்பட்டி விவிமு தோழர் நல்லு.

••

ஜூன் மாதம் 16ந் தேதி இரவு ஒரு மணிக்கு உசிலம்பட்டி போலீசு கும்பல் என்னையும் சமூக நண்பர் கல்யாணக்குமார் என்பவரையும் வாரிக்கொண்டு சென்றது. அந்த நேரத்திலும் நாங்கள் புரட்சிகர முழக்கங்களை இடியென முழங்கியது போலீசு கும்பலுக்கு எரிச்சலை தந்தது. ''உசிலம்பட்டி மேற்கு பகுதிக்கு நாளை கவர்னர் வர இருப்பதால் கருப்புக்கொடி காட்டுவீர்கள் என்று முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகத்தான் உங்களை கைது செய்கிறோம். நாளை மாலை உங்களை விட்டு விடுவோம்'' என்று சமாதானம் கூறினார்கள். வாளாங்குளம் போலீசு நிலையத்தில் எங்களை அடைத்த பிறகு 18ந்தேதி காலை வரை விடுதலைபற்றி எங்களுடைய எந்த கேள்விக்கும் முறையான பதில் கூறவில்லை போலீஸ் கும்பல்.

அதன் பிறகு நாங்கள், ''எங்களை வெளியில் விடுங்கள். இல்லையானால் 'கேஸ்' போட்டு கோர்ட்டுக்கு அனுப்புங்கள். ஸ்டேசனிலேயே அடைத்து வைத்திருந்தால் இனி உண்ணாவிரதம் இருப்போம்'' என்று கூறினோம். அதன் பிறகு எங்கள் மீது பொய் வழக்கு ஜோடித்து உசிலம்பட்டி கோர்ட்டுக்கு அழைத்துச் சென்றனர். 'அரசு கட்டிடங்களுக்கு சேதம் விளைக்க, பஸ்களுக்கு தீ வைக்க, பொதுஜன அமைதிக்கு பங்கம் விளைவிக்க உசிலை யூனியன் அலுவலகம்முன் இரவு இருட்டில் நாங்கள் பேசிக் கொண்டிருந்ததாக' வழக்கு ஜோடித்து சிறையில் அடைத்தனர்.

'ஆளுவது அதிகாரவர்க்கமும் போலீசுமே; சட்டமன்றம் பாராளுமன்றம் மூடுதிரையே' 'பொய் வழக்கு போடும் இந்த போலீசை மக்கள் கமிட்டி முன் தண்டிப்போம்' என்பன போன்ற முழக்கங்களை நாங்கள் சென்ற இடங்களில் எல்லாம் முழங்கினோம். போலீசோ, மக்கள் மத்தியில் எங்களை ஒன்றும் செய்ய முடியாமல் நெளிந்து கொண்டிருந்தது.

கிராமப்புறத்தில் இருக்கும் அனைத்துக் கட்சி அடிமட்டத் தொண்டர்கள், வயிற்றுப் பிழைப்புக்காக சாராயம் காய்ச்சுபவர்கள் சினிமாவுக்குச் சென்று வந்தவர்கள், குடித்தவர்கள், வீட்டு வாசலில் தூங்கிக் கொண்டிருந்தவர்கள், இவர்கள் அனைவரும் அலெக்சாண்டரின் பாதுகாப்புக்காக என கைது செய்யப்பட்டிருந்தனர்.

காங்கிரசு கட்சியைச் சேர்ந்தவர்களும் வந்திருந்தார்கள். வட்டம், குட்டம் என்று யாரும் வரவில்லை. கூலி ஏழைகளே அதிகமாக இருந்தார்கள். புரட்சி பண்பாட்டு இயக்கம், முற்போக்கு இளைஞர் அணி தோழர்கள் 3 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர். எங்கள் கிராமத்தைச் சேர்ந்த மேலும் 3 வி. வி. மு. தோழர்கள் கைது செய்யப்பட்டனர். இந்திய மக்கள் முன்னணியைச் சேர்ந்த ஒருவரும் வந்திருந்தார். கூட்டாகச் சேர்ந்து, அரசியல் விவாதங்கள், புரட்சிகரப் பாடல்கள் நடத்தினோம். கைதைக் கண்டித்தும், ஜூன் 24ந் தேதி தமிழகம் வந்த ராஜீவின் வருகையை எதிர்த்தும் ஒருநாள் உண்ணாவிரதம் இருந்தோம். இ. ம. மு. நபர் உண்ணாவிரதத்தில் கலந்து கொள்ள வில்லை.

சிறைக் கொடுமைகளும், அதன் ஊழல் மிக்க நிர்வாகமும்,





படிப்பகம்

www.padippakam.com

ரோமானிய அடிமைகளின் வரலாற்றை நினைவுபடுத்தின. அப்பாவி கைதிகள் சிறைக் கம்பிகளுக்கு உள்ளே நுழைந்ததிலிருந்து வெளியில் வரும் வரை தினந்தோறும் ஒவ்வொரு நிமிடமும் சிறை அதிகாரிகள், அவர்களுடைய எடுபிடிகளான கருங்காலி கைதிகளின் சித்திரவதைகளுக்கு ஆளாகின்றனர். நாங்களும் இதற்கு விதிவிலக்கு அல்ல. எதிர்த்து கேட்ட போதெல்லாம் தாக்கப்பட்டோம்.

காரணமே இல்லாமலும் அடி வாங்கினோம். ஒரு கட்டத்தில் ஒரு சிறை அதிகாரியின் கையை முறித்து அவனுக்கு பாடம் கற்பித்து விடுவோமா என்றுகூட ஆலோசித்தோம். வெளியில் அரசியல் வேலைகளும் அமைப்பு வேலைகளும் தலைக்கு மேல் இருப்பதை உணர்ந்து, விரைவில் விடுதலையாவதற்காக அதை கைவிட்டோம். உடனே திருப்பி தாக்கி பழி தீர்க்க வேண்டும் என்ற அளவுக்கு ஒவ்வொரு நிமிடமும் கொடுமைகள் தலைவிரித்தாடுகின்றன. சிறைக் கொட்டடிகள் பன்றித் தொழுவம் மாதிரி இருக்கின்றன. கடுகளவும் சுகாதாரம் இல்லை.

சாராயம், கஞ்சா முதல் அனைத்து போதை பொருட்களும் சிறை அதிகாரிகளின் எடுபிடி கிரிமினல் கைதிகளால் தாராளமாக விற்கப்படுகிறது. 200,_ 300 பேராக கொட்டடியில் அடைந்து கிடக்கும்போது சில கிரிமினல் குற்றவாளிகளுடன் பேச்சுக் கொடுத்தோம். அவர்கள் வெளியில் இருக்கும் கிரிமினல்களுடன், போலீசு கும்பலுக்கும், சிறை அதிகாரிகளுக்கும் இருக்கும் கள்ளக் கூட்டை கதை கதையாய் சொன்னார்கள். ஒரு பிக்பாக்கெட் கைதி, ''இந்தியாவிலுள்ள பிக்பாக்கெட் காரங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்திட்டா இந்தியாவையே திணறடிக்கலாம்'' என்றான்.

எங்களுடைய சிறை நடவடிக்கைகள் இம்மாதிரியான கைதிகளுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. அப்பாவி சிறைக் கைதிகளுக்கு சிறிதளவு மனவுறுதியைக் கொடுத்தது.



# நிர்வாகத்தின் திமிர்த்தனத்தால் திண்டாடும் மாணவர்கள்

மண்ணைப பொன்னாக்கும் தொழில் நுட்ப அறிவு தருவது 'செராமிக் கல்வி'. செராமிக் பயன்படாத துறையும், பயன்படுத்தாத மனிதர்களும் இல்லையென்றே சொல்லலாம். வீட்டில் பயன்படுத்தும் கப், சாசர் முதல் ராக்கெட்டில் உஷ்ணம் கடத்தா சாதனம் வரை பயன்படுத்தப்படுகிறது. இந்தியாவில் இதற்கான கல்வி கற்று தரும் விரல்விட்டு எண்ணக் கூடிய கல்லூரிகளில் தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள விருத்தாசலம் 'அரசு பீங்கான் தொழிற் நுட்பக் கல்லூரி'யும் ஒன்று.

1960 முதல் 64 ஆண்டு வரை ஒரு ஆண்டு படிப்பாகவும் 65ஆம் ஆண்டு முதல் 4 ஆண்டுபடிப்பாகவும் உயர்த்தப்பட்டு, இது 'சர்ட்டிபிகேட் கோர்ஸ்' என்று அழைக்கப்பட்டது. பாடத்திட்டம் அதிகமாக இருந்ததால் 74 ஆம் ஆண்டு முதல் 'டிப்ளமா கோர்ஸ்' என்று சான்றிதழ்வழங்கப்பட்டது. தேர்வுக்கான தகுதி 10 ப்ளஸ் 2 கல்வியாக வைக்கப்பட்டுள்ளது. திரும்பவும் 78 ஆம் ஆண்டுகளில் கல்லூரியின் முதல்வர் டி. ஜெகநாதன் என்பவரின் கடுமையான உழைப்பினால் மேலும் பல பாட திட்டங்கள் தயாரிக்கப்பட்டு சேர்க்கப்பட்டது. கல்வியின் தரம் மேலும் உயர்த்தப்பட்டது. இந்தியாவின் மற்ற மாநிலங்களில், இதைவிடக் குறைவான பாட திட்டங்களுக்கு 'பி.இ (செராமிக்) 'பி.எஸ்.சி (செராமிக்) 'பி. டெக்' என்று பட்டங்கள் வழங்கும்போது, இங்கு மட்டும் இன்னும்'டிப்ளமோ' மட்டுமே வழங்கப்படுகிறது.

இதனால், அகில இந்திய அளவில் நடத்தப்படும் ஏஎம்ஐஐ (செராமிக்) தேர்வில் கடந்த பல ஆண்டுகளாக இந்த கல்லூரியில் பயின்ற மாணவர்கள் முதல் மதிப்பெண்ணும் அதிக சதவீதமும் பெற்று பரிசுகள் வாங்கினாலும், அகில இந்திய அளவில் வேலை வாய்ப்புகளில் இவர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள். மற்ற மாநிலத்து மாணவர்கள் குறைவான பாட திட்டங்களும், தேர்ச்சி குறைவானவர்களாக இருந்தாலும், அவர்களிடம் இருக்கும், பிடெக், பி.இ பிஎஸ்சி பட்டங்களுக்குமுன் டிப்ளமோ வெறும் குப்பையாக மதிக்கப்படுகிறது. தேவையான திறமையிருந்தும் தரம் தாழ்ந்த டிப்ளமோ கையில் வைத்திருப்பதால் கழித்துக் கட்டப்படுகிறார்கள். இதற்கு ஒரு விடிவு காண 84 ஆம் ஆண்டிலிருந்தே மாணவர்கள் போராடி வருகிறார்கள்.

தங்களுடையகோரிக்கையை முன் வைத்துப் போராடும் மாணவர்கள், சற்றும் உறுதி குறையாமல் கடந்த மூன்று மாதங்களாக பல வடிவங்களில் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்கின்றனர். தற்போது பயிலும் மாணவர்கள் பழைய மாணவர்கள் சங்கத்தின் உறுதியுடன், அடையாள வேலை நிறுத்தம், தொடர் வேலை நிறுத்தம், தொடர் உண்ணாவிரதம் என்று போராட்டத்தைத் தொடர்கின்றனர். தங்கள் போராட்டம் மக்களைக் கவரும் பொருட்டு காதில் பூ சுற்றிக் கொண்டு நூதன ஊர்வலம் நடத்தினர்.

போராட்டத்தைத் தொடரும் மாணவர்கள், தங்கள் தரப்பு நியாயத்தை தொடர்ந்து பகுதி மக்களிடம் பிரச்சாரம் செய்து அவர்களுடைய ஒத்துழைப்பை வென்றெடுக்க வேண்டும். அதற்காக காதில் பூ சுற்றிக் கொண்டு ஊர்வலம் போவது, உள்ளாடை அணிந்து ஊர்வலம் போவது, தட்டேந்தி, மொட்டையடித்துக் கொண்டு ஊர்வலம் போவது போன்ற நூதன முறைகளால் மக்களை கவர்ந்துவிட முடியும் என நினைப்பது போராட்ட சக்திகளை கொச்சைப்படுத்துவதாகும். பரந்துபட்ட மக்களின் ஆதரவை மலிவாக பெறும் பொருட்டு கவர்ச்சி அரசியல் நடத்தும் ஓட்டுப்பொறுக்கிகளின் கண்டுபிடிப்பான இம்மாதிரியான 'நூதன' போராட்ட முறைகள், போராட்ட சக்திகளை கேலிப் பொருளாக்கி ஆதாயம் தேடும் கேடுகெட்ட வழிமுறையாகும்.

எனவே, போராடும் மாணவர்கள் தொலைநோக்கு சமுதாய கண்ணோட்டத்தில் பிரச்சினைகளுக்கு முடிவுகாண முன் முயற்சி எடுக்க வேண்டும். தங்களின் போராட்டத்திற்கு ஆதரவாக பகுதி மக்களை வென்றெடுக்க அவர்களின் வாழ்வுக்கும், உரிமைக்குமான போராட்டங்களில் முன்னணியில் நிற்க வேண்டும்.



தகவல்:
கலைச்சித்தன்
வடலூர்.



படிப்பகம்

www.padippakam.com

# பொறுக்கி அரசியலின் வசூல் கணக்கு

தமிழ்நாட்டின் ஓட்டுப் பொறுக்கி அரசியல் வாதிகள் தாம் நடத்தி வரும் ஆபாச—வக்கிர அரசியலின் வசூல் கணக்குப் பார்க்கத் தொடங்கியிருக்கிறார்கள். யாருக்கு வசூல் அதிகம் என்பதை ஒப்பிட்டுப் பார்க்கும் போட்டியில் வேறு இறங்கியிருக்கிறார்கள். மேடையிலே ஓட்டுப் பொறுக்கிகள் நடத்தும் ஆபாச—வக்கிரக் கூத்துக்களுக்கு வசூலான தொகை; அதோடு மேடைக்குப் பின்புறம் ஒப்பனை அறையிலே அவர்கள் நடத்திய அரசியல் விபச்சாரம்—அதிகாரத் தரகு—அதற்காகப் பெற்ற ஊதியம்—லஞ்ச—ஊழல்—தொகையும் கணக்குப் பார்க்கிறார்கள். ஆபாச—வக்கிர அரசியல் கூத்துக்கு 'டிக்கெட்'—ரசீது அடித்துச் செய்யும் வசூல்தான் நியாயமானது; அரசியல் விபச்சாரம் செய்து சம்பாதிப்பது அநியாயமானது, விதிகளுக்குப்புறம்பானது என்று அவர்கள் நீதியும் கூட பேசுகிறார்கள்.

தமிழ் நாட்டு அரசியலின் பண்பாட்டுத்தரம் பற்றிய ஆராய்ச்சிக்குப்பிறகு, ஓட்டுப் பொறுக்கிகள் நடத்தும் நிதிநிலை, வரவு, செலவு, வசூல் தணிக்கையில் பத்திரிக்கைகளும் கலந்து கொள்ளுகின்றன. ஆபாச—வக்கிரக் கூத்துக்களைப் பிரசுரித்து வியாபாரம் செய்து வந்த பத்திரிக்கைகள் இதையும் பிரசுரித்து 'கமிஷன்' அடித்துக் கொள்கின்றன.

தேர்தல் நிதிவசூல், அதற்கு முக்கிய லஞ்ச—ஊழல் வருமானம் இரண்டுமே 'தணிக்கை'க்கு உள்ளாகின்றன. இதிலே தேர்தல் நிதிவசூல் தமது பலத்தைக்குறிப்பதால் ஒவ்வொரு கட்சியும் தமது சாதனைகளாகக் கருதி பகிரங்கமாக அறிவிக்கின்றனர். லஞ்ச ஊழல் வருமானம் தேர்தல் சூதாட்டத்திற்குப் பயன்படும் என்றாலும் இந்த விவகாரத்தில் ஒவ்வொரு கட்சியும் பரிசுத்த வேஷம் போட்டுக் கொள்கின்றது. எதிர்க்கட்சிகள்மீது, எதிர்க் கோஷ்டிகள்மீது மட்டுமே புகார்கள் கூறுகின்றன.

எனவே ஓட்டுப் பொறுக்கிக் கட்சிகளின் நிதிநிலை, வரவு, செலவு, வசூல் பற்றிய முழு விவரங்களை அறிய முடியாது. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயமாகத் தெரிகிறது. வரும் தேர்தல்களில் பணம் முக்கியப் பங்கு வகிக்கும்; ஏராளமாக—தாராளமாக புரளும். "உழுதவன் கணக்குப் பார்த்தால் ஒழக்குப் பணம் மிஞ்சாது. ஓட்டுப் பொறுக்கி கணக்குப் பார்த்தால் கோடி கோடியாக மிஞ்சும்" என்று ஒரு புது மொழி உருவாகும்.

சென்ற ஜனவரியில் ஜானகி மந்திரி சபை கவிழ்ந்ததும் சட்ட மன்றத் தேர்தல் வருவது உறுதியானது. உடனடியாகத் தேர்தலுக்கான தயாரிப்பில் குதித்த கருணாநிதி முதல் வேலையாக தேர்தல் நிதிவசூலைத் தொடங்கினார். ஏற்கனவே கடந்த நான்கு ஆண்டுகளாக அடுத்ததேர்தலைக் குறிவைத்துக் குவித்து வைத்துள்ள பணத்தை ஓரங்கட்டி வைத்தார். கட்சியின் மாணவர், இளைஞர், மகளிர் பிரிவு ஒவ்வொன்றுக்கும், ஒன்றிய, வட்ட, மாவட்டக் கிளைகள், கிராம, நகர, மாநகரக் கிளைகள் ஒவ்வொன்றுக்கும் லட்சம் லட்சமாக இலக்குகள் வைத்தார்.

அடுத்த ஆறு மாதங்களில் கட்சிப் பிரச்சாரத்தைவிட வசூல் தொகைகளைப் பெறுவதற்கான கூட்டங்கள் பலவும் நடந்தன. பெட்டி பெட்டியாக, கத்தை—கத்தையாக ரூபாய்நோட்டுகளைப் பெற்றுக் கொண்டு உடன்பிறப்புகளை மெச்சினார். மேலும் மேலும் உசுப்பி விட்டார். "இரண்டரைக் கோடி ரூபாய்தான் சேர்ந்திருக்கிறது. தமிழ்நாட்டில் மூன்றரைக் கோடி வாக்காளர்கள் இருக்கிறார்கள். ஒரு வாக்காளருக்கு ஒரு ரூபாய் வீதம் கணக்குப் பார்த்தாலும் இன்னும் ஒருகோடி ரூபாய் வசூலிக்க வேண்டும்" என்று விரட்டினார்.

"இப்போதைக்குக் கட்சிக்கு வசூலிக்கிறோம். தேர்தலில் வெற்றி பெற்றால் நம்முடைய வசூலைப்பார்த்துக் கொள்ளலாம். தேர்தலிலும், பகிர்ந்தளிக்கப்படும் நிதி நம்மிடம்தான் வரும். அப்பொழுது இந்த வசூலில்முடிந்ததை அமுக்கிக் கொள்ளலாம்" என்கிற உற்சாக நம்பிக்கையில் தொடர்ந்து கருணாநிதியின் உடன்பிறப்புகள் வசூல் வேட்டை நடத்துகிறார்கள். "தேனழித்தவன் புறங்கையை நக்குவான்" என்கிற கழக விதி கட்சி வசூலுக்கு மட்டும் பொருந்தாதா என்ன?

கருணாநிதியின் அமைப்பு—நிர்வாகத் திறமை, உடனடியாக—துரிதமாகத் தேர்தலுக்கு அவர் தயாரிக்கும் திறமை, தேர்தல் நிதி வசூலில் அவர் காட்டும் சாதுரியம் ஆகியவற்றைப் பத்திரிக்கைகளும் ஓட்டுப் பொறுக்கிகளை நம்பி வாழும் பச்சோந்திகளும் புகழ்ந்து தள்ளினார்கள்.

எம்ஜிஆரின் பட்டத்து ராணி என்கிற தகுதியோடு வாரிசு உரிமை கொண்டாடி ஆட்சியைப் பிடித்துவிடத் துடிக்கும் ஜெயலலிதாவும் தேர்தல் நிதிவசூலில் குதித்தார். ஒவ்வொரு சுற்றுப் பயணத்துக்கும் ஒவ்வொரு பொதுக் கூட்டம்—பேரணிக்கும் இவ்வளவு லட்சம் கொடுக்க வேண்டும்என்று தனது கடைக்கண் பார்வை, புன்சிரிப்பு, கையசைப்புக்கெல்லாம் விலை நிர்ணயித்தார்ஜெயலலிதா. ஜெயலலிதாவுக்கும் பெட்டி பெட்டியாக, கத்தை கத்தையாக தேர்தல் நிதி அளித்தார்கள் அவரது தலைமை ரசிகர்கள். ஜெயலலிதா கட்சிக்கு அவ்வளவு நிதி வசூலாகவில்லை. மாவட்டச் செயலாளர்கள் தமது சொந்தப் பணத்தைக் கொடுத்துவிட்டு வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று கிசுகிசு எழுதின பத்திரிக்கைகள். வசூலானது 30 லட்சம் தான் என்கிறார் ஜெயலலிதா, இல்லை ஒரு கோடி ரூபாய் என்கிறார் திருநாவுக்கரசு.

கருணாநிதிக்கும் ஜெயலலிதாவுக்கும் கொடுக்கப்படும் இவ்வளவு தொகை எப்படி வசூலானது? தேர்தலில் இந்தப் பணம் என்ன வேலை செய்யும்? "ஜனநாயகத்"துக்கு என்ன நேரும்? என்றெல்லாம் பத்திரிக்கைகளும் பச்சோந்திகளும் கேள்விகள் எழுப்பவில்லை. வியாபாரத்துக்கும் அரசியல் அரட்டைக்குமான சுவாரசியமான செய்திகளாவே கருதினார்கள்.

ஆனால் அரசியல் எதிரிகள் கருணாநிதியையும் . ஜெயலலிதாவையும் சும்மாவிடவில்லை. "கருணாநிதி கோடி கோடியாக நிதி சேர்க்கிறார். இது பற்றி

**பெட்டி .பெட்டியாக, கத்தை—கத்தையாக ரூபாய்நோட்டுகளைப் பெற்றுக் கொண்டு உடன்பிறப்புகளை மெச்சினார் கருணாநிதி**





படிப்பகம்

www.padippakam.com

'விசாரணை நடத்துவோம்'' என்று மிரட்டினார் மத்திய மந்திரி சிதம்பரம். விடுவாரா கருணாநிதி? ''எங்கள் நிதி விவகாரத்தை விசாரிப்பது என்றால் உங்கள் கட்சி நிதி விவகாரத்தையும் விசாரிக்கத் தயாரா? மறைமலை நகர் மாநாட்டிற்கு மட்டும் 15 கோடி ரூபாய் செலவிட்டீர்களே, அது எங்கிருந்து வந்தது? நாங்கள் அணிகளிடம்தான் நிதி வசூல் செய்கிறோம், உங்களைப்போல பீரங்கி பேரம், லஞ்ச ஊழல் மூலம் நிதி சேர்க்கவில்லை. அதையெல்லாம் விசாரிப்போமா?'' என்று எதிர்ச்சவால் விட்டார், கருணாநிதி.

சிதம்பரத்துக்கு ஏதோ தைரியமாக எதிர் சவால் விட்டாலும் கருணாநிதிக்கு உதறல் எடுத்து விட்டது. சிதம்பரத்தின் மிரட்டல் மட்டுமல்ல, உட்கட்சி கும்பல் தகராறும் நிதி வசூலை விவகாரமாக்கிவிடும்என்று பயப்படுகிறார். எனவேதான் உடனே அன்பழகனை விட்டு கட்சி முழுவதும் ஒரு சுற்றறிக்கை விட்டார். ''நிதி வசூலுக்கான கணக்குகள் முறையாக இருக்கவேண்டும்; ரசீதுகள் பூர்த்தி செய்து அடிக் கட்டைகளைப் பத்திரமாக வைக்க வேண்டும். வசூலாகாத ரசீதுகளும் கணக்குகளோடு ஜூலை மாத இறுதிக்குள் திரும்பி அனுப்ப வேண்டும்.'' என்று உத்திரவு போட்டுள்ளார்.

எதற்கு இந்த எச்சரிக்கை நடவடிக்கை? ஜானகி மந்திரி சபை கவிழ்ந்த பிறகு கவர்னரின் ஆட்சி என்கிற பெயரில் காங்கிரசு கட்சிக்காரர்கள் ஆட்டம்போடுகிறார்கள். அடுத்து பஞ்சாயத்து, நகராட்சிகளில் பெரும்பான்மையாக உள்ளது தி.மு.க.காரர்கள். அவர்களுக்கு உள்ள அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொண்டு கட்டாயத் தேர்தல் நிதி வசூல் நடக்கின்றன. மற்ற எதிர்க் கட்சிகள் பிளவுபட்டுப் பலவீனமாக உள்ள நிலைமை, கருணாநிதியின் வலுவான கூட்டணி, அரசியல் நிர்வாகத்திறமை ஆகியவை காரணமாக கருணாநிதி கட்சியே தேர்தலில் வெற்றி பெறும் என்று இதுவரை அவருக்கு எதிராக இருக்கும் பத்திரிக்கைகள் கூட எழுதுகின்றன. எனவே ஆட்சியைப் பிடித்துவிடுவோம் என்கிற திமிர் இப்போதே தலைக்கேறி அதிகார—மிரட்டல் மூலம் கழகக் கண்மணிகள் வசூல் வேட்டையாடுகின்றனர். இதையெல்லாம் மறைப்பதற்காக, வெண்ணை திரண்டு வரும்போது பானை உடைந்துவிடக்கூடாது என்கிற எச்சரிக்கையோடு கணக்குகளைச் ''சரி'' செய்து வைக்கிறார், கருணாநிதி.

எம்ஜிஆரின் வாரிசுரிமை கொண்டாடும்போது அவருடைய



ஒவ்வொரு சுற்றுப் பயணத்துக்கும் ஒவ்வொரு பொதுக் கூட்டம்—பேரணிக்கும் இவ்வளவு லட்சம் கொடுக்க வேண்டும்என்று தனது கடைக்கண் பார்வை, புன் சிரிப்பு, கையசைப்புக்கெல்லாம் விலை நிர்ணயித்தார் ஜெயலலிதா.

பாசிச — வக்கிரம் — கோமாளித்தனம் அடங்கிய அரசியலுக்கும் சொந்தக்காரியாகிறார் ஜெயலலிதா. ஜெயலலிதா கட்சிக்குள் ஆதிக்கம் வகிப்பதில் ஏற்பட்ட கோஷ்டித் தகராறை காங்கிரசு பயன்படுத்திக் கொள்கிறது. தொகுதி பங்கீடு பேரத்தில ஜெயலலிதாவை வீழ்த்துவது அல்லது கட்சியைப் பிளப்பது என்கிற சதி செய்து பண்ருட்டி — நெடுஞ்செழியன் கும்பலைத் தூண்டிவிட்டது. ''ஜெயலலிதா சர்வாதிகாரியாகிவிட்டார், சசிகலா—நடராஜன் கும்பலின் கைப்பாவையாகவுள்ளார். தேர்தல் நிதி ஒரு கோடி ரூபாயை தனது சொந்தப் பெயரில் போட்டு வைத்துள்ளார். அதை நடராஜன் ஆடம்பரமாகச் செலவிடுகிறார். அது தவிர எம்எல்ஏ சீட்டுத் தருவதாகவும் கட்சிப் பதவிக்காகவும் லட்சம் லட்சமாக வசூலிக்கிறார். ஜானகி வீரப்பன் கும்பலிடமிருந்து காப்பதற்காக 33 எம்எல்ஏகளை பல ஊர்களுக்கு சுற்றுப்பயணம் கூட்டிப்போன செலவு 15 லட்சம் ரூபாய் தரவில்லை. தேர்தல் நிதியாக ஜெயலலிதாவிடம் தந்த பணம் வசூலானதில்லை. மாவட்டச் செயலாளர்களின் சொந்தப் பணம். எனவே ஒரு கோடி ரூபாயும், கணக்கும் கழகப் பொருளாளர் திருநாவுக்கரசிடம் தரவேண்டும்'' என்று பண்ருட்டி—நெடுஞ்செழியன் கும்பல் கோருகிறது.

கடந்த பதினைந்து நாட்களாக ஜெயலலிதா கட்சியின் கோஷ்டித் தகராறுகளைப் பற்றி கிசுகிசு எழுதியே வியாபாரம் நடத்துகின்றன பத்திரிக்கைகள். ஆனால் கோடி கோடியாகப் புரளும் இந்தப்பணம் எங்கிருந்து வந்தது? அரசியலில் அது என்னென்ன சித்துவிளையாட்டுகள் நடத்தும்? என்பது பற்றி அவை கேள்விகள் எழுப்பவில்லை.

கருணாநிதியும், ஜெயலலிதாவும் கோடி கோடியாக இப்போது தேர்தல் நிதி சேர்த்திருப்பது அவர்களே ஒப்புக் கொள்ளும் உண்மை. ஆனால் கிசுகிசு பத்திரிக்கைகள் தமது நம்பகமான அரசியல் வட்டாரத்திலிருந்து தரும் செய்திகள், ஓட்டுப் பொறுக்கி அரசியல்வாதிகள் ஒருவக்கெதிராக மற்றொருவர் வீசும் குற்றச்சாட்டுகள் இன்னும் பல தகவல்கள் தருகின்றன.

● ''எம்ஜிஆர் இறந்ததும் ராமாவரம் தோட்டத்திலிருந்து மூட்டை மூட்டையாக கோணிப் பைகளில் ரூபாய் நோட்டுக்களை நிரப்பி ஜானகி - வீரப்பன் கும்பல் எடுத்துப்போய் மறைத்தது. முன்னாள் மந்திரி முத்துசாமி தந்தையினுடைய சமாதியில் கோடி கோடியாகப் பணத்தைப் புதைத்து வைத்திருக்கிறார்கள். ஒரு எம்எல்ஏக்கு ஐந்து லட்சம் வீதம் கொடுத்து விலைக்கு வாங்கினார்கள்''—இது ஜெயலலிதா கூறும் குற்றச்சாட்டுகள்.

● ''ஜானகி மந்திரி சபையை ஆதரிப்பதற்கும், நான்குகாங்கிரசு எம்எல்ஏக்கள் ராஜினாமாசெய்து, கட்சியைப் பிளக்கவும் ஜானகி—வீரப்பன் கும்பலிடமிருந்து ஒரு கோடி ரூபாய் வாங்கினார், சிவாஜி கணேசன்''—இது சமீப காலம் வரை சிவாஜி கட்சியின் செயல் தலைவராய் இருந்த எம்.பி. சுப்பிரமணியம் கூறும் குற்றச் சாட்டு.

● ''விஜய் மல்லையா போன்ற முதலாளிகளுடன் வைத்துள்ள இரகசிய உறவு காரணமாக ஜெயலலிதா கோடிக் கணக்கில் பணம் வாங்கி வைத்திருக்கிறார்.'' ''ஜெயலலிதா கட்சியைப் பிளப்



படிப்பகம்

பதற்காக பண்ருட்டியிடம் 30 கோடி ரூபாய் பணம் காங்கிரசு கொடுத்திருக்கிறது.''

—இது கருணாநிதி—ஜானகி குடும்பப் பத்திரிக்கைகளின் குற்றச்சாட்டுமட்டுமல்ல; வேறுபிற கிசுகிசுப் பத்திரிக்கைகளும் கூறும் தகவல்கள்.

● ''பாசிச ராஜீவ் கும்பல் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பலகோடி ரூபாய் கருப்புப்பணம் குவித்து வைத்திருக்கிறது. ஆட்சியிலிருப்பதால் தேவையானபோது தேவைக்கு மேலேயே தேர்தல் நிதி திரட்டிக் கொள்ள முடியும்'' —இது ஊரறிந்த உண்மை.

இவையெல்லாம் வெறும் அவதூறுக் குற்றச் சாட்டுகள் மற்றும் கிசுகிசு செய்திகள் என்று புறக்கணித்துவிட முடியாது. தன்னை விலை பேசி ஐந்து லட்சம் ரூபாய் கொடுத்ததாக நாடாளுமன்றத்தில் ஒப்படைத்தார் பெரம்பலூர் தங்கராஜ் எம்பி. அது ஜெயலலிதாவோ, ஜானகியோ யாருடையதாக இருப்பினும் 5 லட்சம் ரூபாயை இப்படி அநாயசமாக வீசி விலை பேசும் அளவு அரசியல் வளர்ந்துள்ளது. இதுவும், ஓட்டுப் பொறுக்கி அரசியல் வாதிகள் காரும், பங்களாவும், , ஐந்து நட்சத்திர விடுதிகளும், வைப்பாட்டிகளுமாக வாழ்வதும், லட்ச லட்சமாக வாரி இறைத்து பேரணிகள்—பொதுக் கூட்டங்கள் நடத்துவதும் அவர்களிடம் கோடி கோடியாகப் பணம் புரளுவதை நிரூபிக்கின்றன.

இதெல்லாம் திராவிடஅரசியல் வாதிகளின் விளைவுகள் என்று ''சோ'' போன்ற ''தேசிய''வாதிகள் பிரச்சாரம் செய்கிறார்கள். ''தேசிய'' அரசியல் இன்னும் அதிகமாக நாறுகிறது. ஜனாதிபதி தேர்தலிலும், ஜனாதிபதிக்குமே விலை பேசியவர்கள், காங்ரகிசுக்காரர்கள். '84 பொதுத் தேர்தல்களில் மட்டும் 500 கோடி ரூபாய் செலவிட்டது பாசிசராஜீவ்கும்பல். தேர்தல்களில் பண ஆதிக்கம் பற்றி கூப்பாடு போடாத ''தேசிய''ப் பத்திரிக்கைகளோ ''தேசிய'' எதிர்க்கட்சிகளோ கிடையாது. தேர்தலில் பண ஆதிக்கத்தை முறிப்படிப்பதற்காக கார்கள் — சுவரொட்டிகள்கூட பயன்படுத்துவதில்லை என்றும், முதலாளிகளிடம் தேர்தல் நிதி வாங்க போவதில்லை என்றும் கூறினார் வி.பி.சிங்.. அவர் போட்டியிட்ட அலகாபாத் தேர்தலில் ஒரு கோடி ரூபாய் செலவு செய்தார். ''நண்பர்கள் செலவு செய்தால் நான் என்ன செய்ய முடியும்'' என்று மழுப்பினார் வி.பி.சிங். தமிழ்நாட்டில் தேர்தல் செலவுகள் லட்சக் கணக்கில் இருந்த போதே மற்ற மாநிலங்களில் கோடிக் கணக்கைத் தாண்டிவிட்டது என்பதுதான் உண்மை.

ஆட்சியிலிருந்த ஓட்டுப் பொறுக்கித் தலைவர்கள் அவ்வளவு பேரும் லஞ்ச ஊழல் மூலம் கோடி கோடியாக கொள்ளையிட்டனர். இதை அவர்களே ஒப்புக் கொள்கின்றனர். ''என்னுடைய லஞ்ச ஊழலை நிரூபிக்க முடியுமா? ஆதாரமிருக்கிறதா?'' என்றுதான் கேட்கிறார்களே தவிர, அதாவது ''என்னுடைய லஞ்ச ஊழலை நிரூபிக்க முடியாத அளவு திறமையாக செய்துள்ளேன்'' என்றுதான் கூறுகிறார்களே தவிர ''நான் லஞ்ச ஊழலில் ஈடுபடவில்லை'' என்று யாரும் நிரூபிக்கவில்லை. இன்னும் ஒரு படி மேலே போய் ''நீ மட்டும் யோக்கியனா, என்னைக் கேட்க வந்து விட்டாயே?'' என்றுதான் கேட்கிறார்களே தவிர, அதாவது ''நீயும் அயோக்கியன், நானும் அயோக்கியன், என்னைக் குற்றம் சாட்ட உனக்கு என்ன தகுதி இருக்கிறது?'' என்றுதான் கேட்கிறார்களே'' தவிர ''நான் யோக்கியன் என்று யாரும் நிரூபிப்பதில்லை.

''யார் ஆட்சிக்கு வந்தாலும் இப்படித்தான் இருக்கும், நீயும் நானும் வந்தாலும் இப்படித்தான் இருக்கும்'' என்று சாதாரண மக்களையே பார்த்து பேச வைத்து விட்டார்களே அதுதான் ஓட்டுப் பொறுக்கிகளின் சாதனை! அதேபோல கோடி கோடியாக நிதி சேர்த்து தேர்தலில் போட்டியிடுவதும் பதவியைப் பிடித்து கொள்ளையிடுவதும் தவிர்க்க முடியாதது என்கிற நியதியாக்கி விட முயலுகிறார்கள். உண்மை என்னவென்றால் நாடாளுமன்ற ஜனநாயகம் அதன் இழிந்த இறுதி வடிவமான பொறுக்கி அரசியலாக சீரழிந்துவிட்டது. பொறுக்கி அரசியலின் முக்கியமான கூறுகள்தான் ஆபாச—வக்கிர அரசியலும் பணமும். காந்தியம், திராவிடம் பேசி அரசியல் நடத்தியவர்கள் இப்போது ஆபாச—வக்கிர அரசியலையும் பணத்தையும் நம்பி அரசியல் நடத்துகிறார்கள்.

● பச்சையப்பன்

## லெனின் மீதே ரஷிய துரோகிகள் அவதூறு!



சர்வதேசப் பாட்டாளி வர்க்க ஆசான்கள் ஸ்டாலினையும் மாவோவையும் சர்வாதிகாரிகள் என்று பழி தூற்றிவரும் ரஷிய ஏகாதிபத்தியவாதிகள் இன்று சோசலிச சிற்பி லெனினையும் சர்வாதிகாரியாகச் சித்தரிக்கத் தொடங்கி விட்டார்கள். அடிமை விலங்கொடித்த ரஷியப் பாட்டாளி வர்க்க சோசலிசப் புரட்சியின் நாயகன், மாபெரும் ஆசான் லெனின் கடுமையான பொருளாதாரக் கொள்கைகளை முன் தள்ளி ஏராளமானோரை தூக்கில்போட உத்திரவிட்டு சர்வாதிகார நடவடிக்கைகளை மேற்கொண்டார் என்று வெளிப்படையாகவே அவதூறு செய்துள்ளனர்.

ரஷிய இலக்கியப் பத்திரிக்கையான 'புதிய உலக'த்தின் மே இதழில் லெனினைப் பற்றிய முழுமையான யதார்த்த கண்ணோட்டம் என்ற பெயரில் வசீலி செலியானின் என்ற கழிசடை எழுதிய 30 பக்கக் கட்டுரை ஒன்று வெளியாகியுள்ளது. அதில் '1917 போல்ஷ்விக் புரட்சியை அடுத்த சில ஆண்டுகளில் நாட்டின் பொருளாதாரத்தைச் சீரமைக்க லெனின் கடுமையான பல நடவடிக்கைகளை எடுத்தார். முதல் கட்டமாக புரட்சியின் எதிரிகளை ஒழித்துக் கட்டினார். அதன் பிறகு தமது அரசியல் எதிரிகள் மீதே பாய்ந்து சிவப்பு பயங்கரத்தை கட்டவிழ்த்து விட்டார்' என்று முதலாளித்துவ சித்தாந்தவாதிகள் கனவில் கூட எண்ணிப் பாராத அவதூறு சேற்றை வாரியிறைத்துள்ளனர்.

மேலும், 'விவசாயிகளுக்கு அடுத்த அறுவடைக் காலம் வரை தேவையான அளவுக்கு மட்டுமே ரொட்டி வழங்கப்படும் என்று ரேஷன் அளவை வெட்டினார். இதை மீறியவர்களுக்கு 10ஆண்டு கடுங்காவல் தண்டனை விதித்தார். லெனின் விதைத்த இந்த அதிகாரதுஷ்பிரயோகத்தை ஸ்டாலின் தீவிரமாககினார்' என்று பகிரங்கமாகவே இந்த துரோகிகள் பழி தூற்றியுள்ளனர்.

கிளாஸ் நாஸ்ட்– பிரஸ்டோரிகா திட்டத்தின் மூலம் அப்பட்டமாக முதலாளித்துவத்தை உயிர்பித்த ரஷ்யாவின் புதிய ஜார்கள் இன்று முதலாளித்துவ கழிசடைகளின் வழியிலே மார்க்சிய ஆசான்களைப் பழிதூற்றவும் கிளம்பி விட்டார்கள். நல்ல முன்னேற்றம்தான்! ●

www.padippakam.com

# அமைதிப் படையின் அக்கிரமங்கள்

சர்வதேச அரங்கில் மனித உரிமைகள் ராணுவ பூட்சுகளால் மிதிக்கப்பட்டு போராளிகளும் சிவிலியன்களும் வதைபடும் பூமியாக ஈழம் மாறிவிட்டது. பாசிச ராஜீவ் கும்பல் நூறாயிரம் துருப்புகளைக் கொண்டு போய் நிறுத்தி கொலை வெறியாட்டத்தை நடத்திவரும் பூமியாக ஈழம் உருக்குலைந்து விட்டது.

வல்லரசுகளின் ஆசியோடு தெற்காசியாவில் கொம்பு சீவி விடப்பட்ட பேட்டை ரௌடியாக மாறி வெறியாட்டம் போடுகிறது பாசிச ராஜீவ் கும்பல். அமைதிக்காக, ஈழத் தமிழரின் நலனுக்கானது என்று பசப்பிய அதன் ஈழ ஒப்பந்தம் கழிப்பறைக் காகிதமாகி விட்டது.

சலுகைகள், சமரச நாடகம், துரோக குழுக்களின் காட்டிக் கொடுக்கும் நடவடிக்கைகள் அனைத்தையும் மீறி ஈழத் தமிழர்கள் இந்திய ராணுவ ஆக்கிரமிப்பிற்கெதிராக உறுதியாகப் போராடி வருகிறார்கள். அவர்களின் போராட்ட உணர்வை எள்முனையளவும்மழுங்கடிக்க முடியவில்லை.

தோல்வியாலும் அவமானத்தாலும் முகத்தில் கரி பூசிக் கொண்டு சர்வதேச அரங்கில் மேலும் அம்பலப்பட்டு தனிமைப் பட்டு வருகிறது பாசிச ராஜீவ் கும்

அன்புள்ள ஆசிரியருக்கு,

ஈழத் தமிழர்கள் மீதான இந்திய ராணுவத்தின் சமீபத்திய கொலை வெறியாட்டத்தைக் கண்டித்து டென்மார்க்கிலுள்ள இந்தியத் தூதரகத்தின் எதிரே நாங்கள் ஜூன் 2ம் நாளன்று ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினோம். ஆர்ப்பாட்டத்தில் பெண்கள் குழந்தைகள் உள்ளிட்டு 700க்கும் மேற்பட்ட தமிழர்கள் பங்கேற்றனர். ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் எங்கள் தாய்நாட்டின்மீது ராஜீவ் அரசாங்கத்தின் மிருகத்தனமான நடவடிக்கைகளை எதிர்த்து இந்தியத் தூதரிடம் மனு ஒன்றைக் கொடுத்தோம். ஆனால் ராஜீவின் விசுவாசத தூதர் மனுவை ஏற்க மறுத்துவிட்டார். இந்திய அரசின் இன்றைய நிலையை அவர் இதன் மூலம் நிரூபித்துக் காட்டியுள்ளார்.

இது தவிர ஐரோப்பாவிலுள்ள ஏராளமான கட்சிகளும் அமைப்புகளும், ஏன், டென்மார்க்கிலுள்ள பள்ளிக் குழந்தைகள்கூட ஈழத்தின் மீதான இந்திய ராணுவத் தாக்குதலை நிறுத்தக் கோரி கடிதம் எழுதியுள்ளதை இதனை உங்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறோம்.

(டென்மார்க்கிலுள்ள தமிழர் நலன்புரி மன்றம் அனைத்து பத்திரிக்கை ஆசிரியர்களுக்கும் 15.6.88 தேதியிட்டு எழுதிய கடிதத்திலிருந்து)

## சிவிலியன்கள் மீது துப்பாக்கிச் சூடு — குண்டுவீச்சு — சூறையாடல்கள்

மார்ச் 11 அன்று கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள முத்தையன் காடு கிராமத்தை இந்திய அமைதிப் படை. சுற்றி வளைத்து சூறையாடியது. 15க்கும் மேற்பட்ட கடைகள் தீக்கிரையாக்கப் பட்டன. பல வீடுகள் இடித்து நொறுக்கப்பட்டன இந்திய ஆக்கிரமிப்பு ராணுவத்தால் ஏழு சிவிலியன்கள் வெட்டிக் கொல்லப் பட்டனர். பலர்படுகாயமுற்றனர்.

மார்ச் 13 அன்று கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள காளிகாடு கிராமத்தின் மீது இந்திய விமானம் படை தொடர்ச்சியாக குண்டு வீசித் தாக்கியது. பயிர்கள் தீக்கிரையாக்கப்பட்டன. ஏப்ரல் 20 அன்று தொண்டமனாறு கோயிலருகே இந்திய அமைதிப்படை கண்மூடித்தனமாக சிவிலியன்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியது. ஆறு சிவிலியன்களும் இரு குழந்தைகளும் மாண்டனர். இதுபோலவே பெட்ரோ முனை பேருந்து நிலையத்திலும், ஒடிசடன் ராணுவ முகாம் அருகேயும் கண்முடித்தனமான துப்பாக்கிச் சூடுகளினால் பல சிவிலியன்கள் கொல்லப்பட்டனர்.

மே மாதத் துவக்கத்தில் அம்பாறை மாவட்டத்திலுள்ள தங்க வேலாயுதபுரம், பனிச்சம்கேணி ஆகிய கிராமங்கள் மீது இந்திய விமானம் குண்டு வீசித் தாக்கியது. நூற்றுக்கணக்கான வீடுகள் இடிந்து நொறுங்கின. மே 13 14 தேதிகளில் வல்வெட்டித் துறையின் கடற்கரையை ஒட்டிய கிராமங்கள் மீது இந்திய கப்பற் படை இரவு நேரத்தில் குண்டு வீசித் தாக்கியது. ஆர்மிக்காரர்கள் ஊரை விட்டு ஓடும்படி சிவிலியன்களை விரட்டினர். இப்பகுதியிலுள்ள வீடுகள் அனைத்தும் தரை மட்டமாக்கப்பட்டன. எத்தனை சிவிலியன்கள் கொல்லப்பட்டனர் என்ற தகவல்கள் கிடைக்கவில்லை. மே 20ம் நாளன்று முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள அலம்பில், செம்மலை, குமுலமுனை, தண்ணீரூட்டு, ஆண்டன் குளம் முதலான கிராமங்களை இந்திய ஹெலிகாப்டர் படை சுற்றி வளைத்து வான் வழியேயும் தரை வழியேயும் தொடர்ந்து 3 நாட்களுக்கு புலிகளைத் தேடுவது என்ற பெயரில் அப்பாவி சிவிலியன்களைத் தாக்கியது. எத்தனை பேர் மாண்டனர் என்ற தகவல் இதுவரை கிடைக்கவில்லை.

(பிரான்ஸ் நாட்டின் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைக் கமிஷனுக்கு மே மாதத்தில் அளித்த அறிக்கையிலிருந்து)

அமைதிப் படையின் குண்டு வீச்சுக்கு இலக்கான 14 வயது சிறுமி; யாழ் மருத்துவ மனையில் உயிருக்குப் போராடுகிறார்.





படிப்பகம்

www.padippakam.com

### கைது—சித்திரவதை—படுகொலைகள்

யாழ்ப்பாணத்தில் கொக்குவில்லைச் சேர்ந்த ஓய்வு பெற்ற பள்ளி ஆசிரியரான கந்தையா சுப்பிரமணியம் அமைதிப்படையினரால் கைது செய்யப்பட்டு கொடூரமாக சித்திரவதை செய்யப்பட்டார். அவரது ஆசனவாயில் மிளகாய்ப் பொடியைத் தூவியும், மரக்கட்டையை செருகியும் இடைவிடாமல் தொடர்ந்து அடித்தும் சித்திரவதை செய்தனர். யாழ் மருத்துவமனையில் இன்று அவர் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறார். அவர் விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஆதரித்தார் என்பதுதான் அவர் செய்த குற்றம்.

யாழ்ப்பாணத்தின் செயிண்ட் ஜான் கல்லூரி ஆசிரியர்களான அல்போன்சிஸ் மற்றும் கமலநாதன் ஆகிய ஆசிரியர்கள் கடந்த மே 17 அன்று அமைதிப்படையால் கைது செய்யப்பட்டு காங்கேசன் துறை ராணுவ முகாமுக்கு இழுத்துச் செல்லப்பட்டு மிருகத்தனமாக சித்திரவதை செய்யப்பட்டனர். கமலநாதன் பின்னர் யாழ் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறார். ஆனால் அல்போன்சிஸ் என்ன ஆனார் என்று இதுவரை தெரியவில்லை. விடுதலைப் புலிகளை ஆதரித்தாலேயே இவர்களுக்கு இந்த தண்டனை! இந்த அயோக்கியத்தனத்தை எதிர்த்து யாழ் நகரில் மாணவர்கள் பள்ளிகளையும் கல்லூரிகளையும் புறக்கணித்து கடையடைப்பு போராட்டத்தை நடத்தினர். சிங்கள எம்.பி.க்கள்கூட சிறீலங்கா பாராளுமன்றத்தில்இதுபற்றி கேள்விஎழுப்பினர்.

ஏப்ரல் இரண்டாவது வாரத்தில் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள வடகாச்சி, இரணைமடு, பரந்தன் முதலான கிராமங்கள் அமைதிப்படையால் சுற்றி வளைக்கப்பட்டு சிவிலியன் அனைவரும் வரிசையாக நிறுத்தப்பட்டனர். இதில் இன்னின்னார் புலிகளின் ஆதரவாளர்கள் — புகலிடம் கொடுப்பவர்கள் என்று முக்காடு அணிந்த துரோகக் குழுக்கள் காட்டிக் கொடுத்ததும் அமைதிப் படையினர் அந்த அப்பாவி சிவிலியன்களை இழுத்துப் போய் மிருகத்தனமாக சித்திரவதை செய்தனர். இதுபோலவே வல்வெட்டித்துறை, பொலிகந்தி, உடுப்பிடி பகுதிகளிலும் நடந்துள்ளது.

ஏப்ரல் 14 அன்று தாழம்குடா கிராமத்தில் புலிகளின் ஆதரவாளர்களான பாஸ்டின், சிசீ ஆகியோர் அமைதிப்படையால் கைது செய்யப்பட்டு அமைதிப் படையினரால் இழுத்துச் செல்லப்பட்டனர். அவர்கள் இந்திய ராணுவ முகாமில் கொடூரமாக சித்திரவதை செய்யப்பட்டு நடைபிணமாக விடுதலை செய்யப்பட்டனர். பின்னர் அதே ராணுவ முகாமிலிருந்து துரோகக் குழுக்களின் கைக்கூலிகள் அவர்களைப் பின் தொடர்ந்து வந்து தாக்கிக் கொன்றனர். இது போலவே பொறைதீவு, செட்டிபாளையம் களுதவெளி கிராமங்களில் கைது செய்யப்பட்ட புலிகளின் ஆதரவாளர்கள் துரோகக் குழுக்களால் கொன்றொழிக்கப்பட்டுள்ளனர்.

# அமைதிப்படையின் அக்கிரமங்கள்

**சிறீலங்காவில் தமிழ் சிவிலியன்களுக்கெதிராக பாரதூரமான மனித உரிமை மீறல் நடவடிக்கைகளில் இந்திய ஆக்கிரமிப்பு ராணுவப் படைகள் ஈடுபட்டுள்ளது உண்மைதானா?**

**போராளிகளுக்கும் இந்தியப் படையினருக்குமிடையே உக்கிரமான போர் நடக்கும் பகுதிகளுக்குச் செல்ல சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினருக்கும், வெளிநாட்டுப் பத்திரிகை நிருபர்களுக்கும் அனுமதி மறுக்கப்பட்டது உண்மைதானா?**

ஆம் எனில், இதற்கான காரணங்கள் என்ன? போரில் படுகாயமுற்றவர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவ மறுப்பது ஏன்?

இந்திய ராணுவத்தின் மனித உரிமை மீறல் பற்றிய செய்திகள் உண்மையானால், இந்திய மற்றும் சிறீலங்கா அரசுகளுடன்தொடர்பு கொண்டு மனித உரிமை மீறலுக்கு எதிரான நமது கடுமையான கண்டனத்தைத் தெரிவிக்க வேண்டும்.

அதே சமயம் சிறீலங்கா அரசிடம், போராளியோ, ராணுவத்தினரோ யாராக இருந்தாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ உதவி செய்யசெஞ்சிலுவைச் சங்கத்திற்கு உள்ள உரிமையை விளக்கி எவ்வகையிலும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தைத் தடுப்பது முறையல்ல என்று கோர வேண்டும்.

(இலங்கையில் இந்திய அமைதிப் படையின் மனித உரிமைமீறல் பற்றி நெதர்லாந்து பாராளுமன்றத்தில் 10.12.87 அன்று உறுப்பினர் ஹென்க் நோல் எழுப்பிய கேள்விகள்.)

பல். மனித உரிமைகளைக் காலில் போட்டு மிதிக்கும் பாசிச காட்டுமிராண்டி என்ற பகிரங்கமான குற்றச்சாட்டுகளை எதிர்கொள்ள முடியாமல் விழிபிதுங்கி நிற்கிறது. இதை மேலும் உறுதிப்படுத்தும் வகையில் இங்கே சில சாட்சியங்களைத் தொகுத்தளிக்கிறோம்.

உள்நாட்டிலும் சர்வதேச அரங்கிலும் அவமானப்பட்டு தனிமைப்பட்டுப் போயுள்ள பாசிச **ராஜீவ் கும்பல் அவசர அவசரமாக ஈழ ஒப்பந்தத்தைஅமுலாக்கு அமைதியையும் ஜனநாயகத்தையும் நிலைநாட்டி விட்டதாக காட்டிக் கொள்ளத் துடிக்கிறது. இதற்காக ஒருபுறம் புலிகள்இயக்கத்தை எப்படியாவது நிர்ப்பந்தித்து சிறுசிறு அம்சங்களில் விட்டுக் கொடுத்து** ஒப்பந்தத்தை ஏற்கச் செய்து, வடக்கு கிழக்கு மாகாணத் தேர்தலை நடத்திவிட முயற்சிக்கிறது. மறுபுறம் இந்திய ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடும் புலிகளைப் பூண்டோடு ஒழித்துவிட்டு துரோகக் குழுக்களின் துணையுடன் தனது நோக்கங்களை சாதித்துக் கொள்ளத் துடிக்கிறது.

துரோகக் குழுக்கள் தங்களை அரசியல் கட்சியாக அங்கீகரிக்கவும், இப்போதே கூட்டணிக்காகவும் நாயாய் அலைகின்றன. இத்தனை நாளும் தனிமைப்பட்டு முடங்கிக் கிடந்த அமிர்தலிங்கம் கொழும்புக்குப் பறக்கிறார். அவர் கொழும்பில் கட்சி அலுவலகம் தொடங்கி 'அரசியல்' நடத்த **ராஜீவ் கும்பல்** ஏற்பாடுசெய்துள்ளதாகத் தகவல்கள் வருகின்றன. **புலிகள் பங்கேற்கா விட்டாலும் வடக்கு—கிழக்கு மாகாணத் தேர்தலை நடத்திவிடத் துடிக்கிறது பாசிச ராஜீவ் கும்பல். 23 ஈழத்தமிழருக்கு ஒரு இந்திய சிப்பாய் என்ற விகிதத்தில் ராணுவத்தைக் குவித்து அதன் கண்காணிப்பின்கீழ் நடத்தப்படும் இந்தத் தேர்தல் முற்றிலும் ஜனநாயக விரோதமானது; அநீதியானது; துரோகத்தன**மானது.

மறுபுறம் புலிகள், இந்திய உளவுத்துறை அமைப்பான 'ரா' வுடன் ரகசிய பேரங்களில்—பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டு வருகின்றனர். புலிகளின் புணர்வாழ்வுக்காக நிதி, போர்



படிப்பகம்

www.padippakam.com



இந்திய அமைதிப்படை போராளிகள் தலைமறைவாகியுள்ள சிவிலியன் குடியிருப்புப் பகுதிகளின்மீது குறிப்பாக இரவு நேரங்களில் கண்மூடித்தனமாக வான் வழியேயும், தரை வழியேயும் குண்டு வீச்சு நடத்தியுள்ளது. சிவிலியன்கள் தஞ்சமடைந்துள்ள கோயில்கள், பள்ளிகள் மீதும் தாக்குதல் நடத்தியுள்ளது.

உயிர் பிழைக்க சிவிலியன்கள் யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியாவுக்குத் தப்பியோடுகின்றனர். ஆனால் அமைதிப் படையின் ஹெலிக்காப்டர்கள் பகலிலோ இரவிலோ ஏதேனும் ஒரு வாகனம் நகர்ந்தால்கூட குண்டு வீசும்போது அவர்களால் எப்படி தப்பியோடி உயிர் பிழைக்க முடியும்? எனவே அவர்கள் பிரதானசாலை வழியே செல்வதைக் கைவிட்டு காடுகள் வழியே ஏறத்தாழ 20 முதல் 40 நாட்கள் வரை நடந்து போய் வவுனியாவைச் சென்றடைந்தார்கள்.

இந்திய அமைதிப் படையினர் யாழ்ப்பாணத்தை முற்றுகையிட்டு சிவிலியன்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்கள் கிடைக்காதபடி தடுத்தனர். யாழ் மருத்துவமனையைத் தம் கட்டுப்பாட்டில் கொண்டு வர மருத்துவர்களையும் தாதியர்களையும் கோரமான முறையில் கொன்றொழித்தனர். பொதுக் கட்டிடங்களை இடிப்பது குடியிருப்புகளைத் தாக்கி அழிப்பது, சூறையாடுவது, கற்பழிப்பது முதலான கேவலமான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

மூன்று நட்சத்திர அணி எனப்படும் போராளிக் குழுக்கள் அமைதிப் படையின் கைக்கூலிகளாக மாறி புலிகள் இயக்கத்தினரைக் காட்டிக் கொடுக்கும் துரோகிகளாக மாறிவிட்டனர். புலிகள் இயக்க ஆதரவாளர்கள் கைது செய்யப்படுவதும் பின்னர் அவர்கள் காணாமல் போவதும் தொடர்கிறது. செஞ்சிலுவைச் சங்கத்தினரும், பத்திரிக்கையாளர்களும் போர் நடக்கும் பகுதிகளுக்குச் செல்ல அனுமதி மறுக்கப்படுகின்றனர்.

ஈழத்தில் மனித உரிமை மீறல் மற்றும் சிவிலியன்களுக்குப் பாதுகாப்பாற்ற நிலையைக் கண்டுநாங்கள் மிகவும் கவலையடைகிறோம். இந்திய—இலங்கை அரசுகள் பின்வரும் நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள கோருகிறோம்.

- 1947 ஜெனிவா தீர்மானத்தின்படி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தை போர்ப் பகுதிகளுக்குச் செல்ல அனுமதிக்க வேண்டும்.
- அரசு சார்பற்ற அமைப்புகள், சர்வதேச மனித உரிமைக் கழகத்தினர் மற்றும் பத்திரிக்கையாளர்கள் சுதந்திரமாக வடக்கு—கிழக்கு மாகாணங்களுக்குச் செல்ல அனுமதியளிக்க வேண்டும். அவர்கள் யுத்தக் கைதிகளைச்சந்திக்கவும் உரிமை தரப்பட வேண்டும்.
- உடனடியாகப் போர் நிறுத்தம் செய்து சர்வதேசப் பார்வையாளர்கள் முன்னிலையில் அமைதிப் பேச்சு வார்த்தை நடைபெற வேண்டும்.
- யாரையும் எந்த நேரத்திலும் விசாரணையன்றி கைது செய்து சிறையிலடைக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உடனடியாக நீக்க வேண்டும்.
- அனைத்து தமிழ் கைதிகளையும் உடனடியாக விடுதலை செய்யவேண்டும்.

(ஜெனிவாவில் 9.2.88 அன்று ஐக்கிய நாடுகளின் மனிதஉரிமைக் கமிஷனின் 44வதுகூட்டத் தொடரில்நிறைவேற்றப்பட்ட 'சிறீலங்காவில் தமிழர் பிரச்சினை' பற்றிய அறிக்கையிலிருந்து)

## கற்பழிப்புகள்

கடந்த மார்ச் மாதத்தில் மட்டும்
ங்கேணி கிராமத்தில் 7 பேரும், வாக
ல் ஒரு பெண்மணியும் இந்திய அமை
டையால் கற்பழிக்கப்பட்டனர்.
லில் இரு அன்னையர்கள் உள்ளிட்ட 6
கள் இரணைமடு—விஸ்வமடு ஆகிய
மங்களில் அமைதிப்படையினரால்
ழிக்கப்பட்டனர். இதை எதிர்த்து கிளி
ச்சியில் முற்றாக கடையடைப்புநடத்தப்
து. குடிமக்கள் கமிட்டி அமைதிப்
உயரதிகாரிகளிடம் முறையிட்டும்கூட
றுவரை எந்த நடவடிக்கையும் இல்லை.

இக்கேவலமான நடவடிக்கைகளுக்கு
ரம் வைத்தாற்போல் முல்லைத்தீவு
பட்டத்தில் குமுழமுனை கிராமத்தில்
பள்ளிச்சிறுமிகள் அமைதிப்படையால்
பழிக்கப்பட்டனர்.



நிறுத்தம், புலிகள் ஆயுதங்களை ஒப்படைப்பது, வடக்கு—கிழக்கு மாகாண இணைப்பு, கூடுதல் அதிகாரங்கள் என்ற முறையில் பேரங்கள் நடப்பதாக செய்திகள் வருகின்றன. ஆனால் அதற்கு முன்னரே புலிகளைப் பூண்டோடு ஒழிக்கும் நடவடிக்கையில் அமைதிப்படை ஈடுபட்டுவருகிறது. 200க்கும் மேற்பட்ட கொரில்லாக் குழுக்களைக் கொண்டிருந்த புலிகள் இயக்கம் இன்று சில பத்து குழுக்களாக சிறுத்து விட்டனர் என்று இந்திய அரசே கூறுகிறது.

புலிகளை அழித்தொழிப்பதன் மூலமோ அல்லது ரகசிய பேரங்கள் சதிகள் மூலமோ ஈழப் பிரச்சினைக்கு ஒருபோதும் தீர்வு காண முடியாது. அவை இந்திய—இலங்கை மக்களுக்குஎதிரானவை. மேலும், மக்களுக்குத் தெரியாமல், மக்களுக்கு பகிரங்கமாக அறிவிக்காமல் திணிக்கப்படும் எந்தவொரு ரகசிய ஒப்பந்தத்துக்கும் ஈழ மக்கள் பொறுப்பேற்க முடியாது. ஈழ மக்கள் பெருமளவு உயிர்த்தியாகம் செய்ததும், ரத்தம் சிந்தியதும் தங்களின் சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டுவதற்கேயன்றி, ஒரு சில குழுத் தலைவர்களின்குறுகிய சுயநலன்களுக்காக அல்ல. ஈழத் தமிழர்களின் தீரமிக்க உரிமைப் போரை விலைபேச முடியாது; அழித்து விடவும் முடியாது. சர்வதேச மக்கள் ஆதரவுடன் இதை மீண்டும் ஈழ மக்கள் நிரூபித்துக் காட்டுவார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

இந்திய அமைதிப்படை புலிகள் மீது தொடுக்கும் யுத்தம் அநீதியானது. இந்திய ராணுவம் கட்டவிழ்த்து விட்டுள்ள அடக்குமுறைகள் அட்டூழியங்களின் விளைவாக சிவிலியன்கள் சொல்லொணாத் துயரத்தை அனுபவித்து வருகிறார்கள். இந்திய அமைதிப்படை இந்தியாவின் நல்லெண்ணத்தைச் சிதைத்து விட்டது. இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையையும் சர்வதேச மதிப்பையும் செல்வாக்கையும் சிதைத்துவிட்டது.

இந்திய ராணுவத்தின் அட்டூழியங்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். போர் நிறுத்தும் உடனடியாக அறிவிக்கப்பட வேண்டும். போர் நிறுத்தத்துக்கு முன் போராளிகள் ஆயுதங்களை சரணடையச் செய்யக் கோருவது நடைமுறையில் சாத்தியமானதல்ல. தமிழர்களின் அமைதிக்கும் சமாதானத்துக்கும் சேவை செய்ய விரும்பும் நான் உங்கள்மீது நம்பிக்கை வைத்து இவற்றைக் கோருகிறேன்.

(மனித உரிமைக்கான வழக்கறிஞர்கள் மற்றும் சர்வதேச உடல் ஊனமுற்ற மக்களின் ஐநா. சபை பிரதிநிதியும் தலைமை சட்டத் தலைவருமான காரென் பார்க்கர் ராஜீவ் காந்திக்கு எழுதிய கடிதத்திலிருந்து).

இந்திய—இலங்கை ஒப்பந்தத்திற்குப்பிறகு தமிழ் மக்களுக்கு எந்தவொரு முன்னேற்றமும் ஏற்படவில்லை. சிறீலங்காவிலும் வெளிநாடுகளிலும் தமிழ் மக்கள் இன்னமும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நூற்றுக்கணக்கான தமிழர்கள் சிறைகளிலும் சித்திரவதை முகாம்களிலும் வதைபடுகிறார்கள். வெளிநாடுகளில் தங்கியுள்ள தமிழ் அகதிகள் தாய் நாடு திரும்ப வாய்ப்பேயில்லை ஏனெனில் அங்கே அவர்களுக்கு நிச்சயமாக அமைதிஇல்லை. 25 பேருக்கு ஒருசிப்பாய் என்ற விகிதத்தில்இந்தியராணுவம்பெருமளவில்ஈழத்தில் குவிக்கப்பட்டுள்ளது. ஆனாலும் கூட அது தமிழர்களுக்காக ஒரு மண்ணும் செய்யவில்லை.

ஈழத் தமிழர்களுக்கு உதவுவதாகக் கூறும் உங்கள் நோக்கத்தை டச்சு நாட்டு ஜனநாயகக் கட்சியாகிய நாங்கள் சந்தேகிக்கிறோம். அவதிப்படும் ஆயிரக்கணக்கான ஈழத் தமிழர்களைப் பார்த்துக் கொண்டு நாங்கள் சும்மாயிருக்க முடியாது. உங்கள் ராணுவத்தை ஈழத்திலிருந்து திரும்பப் பெறுமாறும், ஈழத் தமிழர் நலனுக்காக கொஞ்சமாவது நடவடிக்கை எடுக்குமாறும் இக்கடிதத்தின் மூலம் கோருகிறோம்.

(டச்சு நாட்டின் சமூக ஜனநாயகக் கட்சி இந்தியப் பிரதமர் ராஜீவுக்கு 25.3.88 தேதியிட்டு எழுதிய பகிரங்க கடிதத்திலிருந்து)

# மாஃபியா குண்டர்கள் -ஓட்டுப் பொறுக்கிகள் -போலீசுக்காரன்கள் கூட்டு

ஓட்டுப் பொறுக்கி அரசியல்வாதிகள், போலீஸ்காரன்கள், சமூக விரோதிகளின் கூட்டு எவ்வளவு அபாயகரமாக உருவாகிவிட்டது என்பதற்கு மேலும் இரண்டு சான்றுகள்: பெங்களூரில் நடந்த கேரள வக்கீல் ரஷீது கொலை மற்றும் சென்னை திருவான்மியூரில் நடந்த ஆட்டோ டிரைவர்கள் கொலைகள்.

இவ்விரு சம்பவங்களிலும் கோரமான முறையில் நடந்த கொலைகளும், அவற்றை மூடி மறைப்பதற்கு நடந்த முயற்சிகளும் பல அதிர்ச்சியூட்டும் செய்திகளைச் சொல்லுகின்றன. கேரள வக்கீல் ரஷீதை உயர் அதிகாரிகள் உட்பட போலீசாரே அடித்துக் கொன்றனர். விபச்சாரியாய் இருந்தார்கள். திருவான்மியூரில் ஐந்து பேரை விபச்சார விடுதி தரகர்கள் கொன்றனர் உயர் போலீஸ் அதிகாரிகள் அதற்கு உடந்தையாய் இருந்தார்கள். இவ்விரு சம்பவங்களோடும் ஓட்டுப் பொறுக்கி அரசியல்வாதிகள் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். தொழில் போட்டியின் காரணமாக கேரள வக்கீல் ரஷீது கொலையில் கர்நாடக போலீசு மந்திரி ஜாலப்பாவின் தொடர்பு வெளிவந்து விட்டது. ஆனால் திருவான்மியூர் கொலைகளில் தமிழக ஓட்டுப் பொறுக்கி அரசியல்வாதிகளின் தொடர்பு வெளிவரவில்லை.

கேரளா கொல்லத்தைச் சேர்ந்தவர் சதாசிவன். சுயநிதிக் கல்லூரிகள் வைத்துக் கொள்ளையடிப்பதில் இவருக்கும் கர்நாடகா போலீசு மந்திரி ஜாலப்பாவுக்கும் போட்டி. கர்நாடகா கோலார் தங்க வயல் நகரில் சுயநிதி மருத்துவக் கல்லூரி வைக்க சதாசிவனுக்கு முதலில் அனுமதி கிடைத்தது. பிறகு மந்திரி ஜாலப்பா தலைமையிலான ஒரு அறக் கட்டளைக்கு அனுமதியை மாற்றிவிட்டது "பரிசுத்தம்" ஹெக்டே மந்திரி சபை.

ஏற்கனவே சஞ்சய் காந்தி ஆசிரியர் கல்லூரி ஒன்றை சிலருடன் சேர்ந்து சதாசிவன் நடத்தி வந்தார். தொழில்போட்டி காரணமாக அவர்களைப் பிரித்து சிவதாசனை விரட்டும்படி ஏற்பாடு செய்தார் ஜாலப்பா. போலீசு ஆதரவுடன் சதாசிவனின் எதிரிகள் கல்லூரியைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். இருப்பினும் எதிரிகள் அந்தக் கல்லூரிக்குள் நுழைவதற்குத் தடை உத்திரவு பெற்றிருந்தார் சதாசிவன். ஆனால் அதை அமுலாக்கவோ, கல்லூரிக்குள் நுழையவோ அவரால் முடியவில்லை.

இந்தச் சமயத்தில் தமது உறவினருக்கு அந்தக் கல்லூரியில் இடம் கேட்டு சதாசிவனை அணுகினார் கேரள வக்கீல் ரஷீத். கோர்ட் உத்திரவை அமுலாக்குவதாகக் கூறி ரஷீத் கல்லூரிக்குப் போனார். எதிரிகள் போலீசை ஏவி ரஷீத்தை அடித்து நொறுக்கி பல்லை உடைத்து ஆட்டோவுக்குள் தூக்கிப் போட்டு போலீஸ்



கேரள வக்கீல் ரஷீத்

கர்நாடகா போலீசு மந்திரி ஜாலப்பா





படிப்பகம்

நிலையத்துக்கு இழுத்துப் போனார்கள். அங்கேயும் நையப் புடைத்தனர். அடுத்த நாள் கோர்ட்டுக்கு இழுத்துப் போய் பொய் வழக்குப் போட முயன்றனர். அவர் ரத்தம் வடியும் காயங்களுடன் ''நான் ஒரு வக்கீல்; என்னைக் காப்பாற்றுங்கள்'' என்று கதறவே உள்ளூர் வக்கீல்கள் உதவியுடன் ஜாமீனில் விடப்பட்டார்.

அடுத்த நாள் அவர் தங்கியிருந்த ''சந்தியா லாட்ஜ்''சில் இருந்து போலீஸ் நிலையத்துக்கும் அருகிலிருந்த சத்தியப் பிரகாஷ் ஓட்டலுக்கும் போலீசார் இழுத்துப் போனார்கள். ஓட்டல்களுக்குமுன் பணமும், ''பில்'' தொகையும் போலீசாரே கட்டினர். சத்தியப் பிரகாஷ் ஓட்டலில் வைத்து சில போலீசாரும், விபச்சாரிகள், மற்றும் விபச்சாரத் தரகர்களும் சேர்ந்து க்தறக் கதற ரஷீத்தை அடித்துக் கொன்றனர். ஓட்டல்காரர்களும் இதற்கு உடந்தை. அன்றுஇரவு ரஷீத்தின் பிணத்தை ஒரு காரில் தூக்கிப் போட்டுக் கொண்டு ஒரு பண்ணை வீட்டுக்குப் போனார்கள். அங்கிருந்து தமிழ்நாட்டிலுள்ள தர்மபுரி—லோகூர் ரயில் நிலையங்களுக்கு இடையே ரயில்பாதையோரப் புதரில் பிணத்தை வீசிவிட்டுப் போனார்கள்.

ஒரு ஆட்டு இடையன் பிணத்தைப் பார்த்து, ரயில்வே பாதைத் தொழிலாளியிடம்சொல்லரயில்வே போலீசுக்கும் தமிழ்நாடு போலீசுக்கும் தகவல் கிடைத்தது. விடுதிகளின் ரசீதுகள், டையரி, ஆகிய தடையங்களை வைத்து அடையாளம் கண்டனர். கேரளாவுக்குத் திரும்பும்போது ரயிலில் இருந்து விழுந்து மாண்டு போனார் என்று கர்நாடகா போலீசார் கூறினர். வழக்கை விசாரித்த கர்நாடக உளவுத்துறை போலீசார்தான் கொன்றனர் என்று முதல் தகவல் அறிக்கை எழுதினார். பிறகு அடையாளம் தெரியாதவர்களால் கொல்லப்பட்டதாக அதைத் திருத்தினர். அப்புறம் சதாசிவனே ரஷீதைக் கொன்றதாக சாட்சிகள் தயாரிக்கத் தொடங்கினர்.

ரஷீது கொல்லப்படுவதற்கு முதல்நாள் பெங்களூர் வக்கீல்கள் சங்கத்துக்கு ஒரு கடிதம் எழுதினார். அதுவே ரஷீதின் சாவுவாக்கு மூலமாகும். அதன்படி மந்திரி ஜாலப்பாவும் பெங்களூர் துணை போலீசு கமிஷனர் நாராயணனும் தான் ரஷீது கொலைக்கு காரணமானவர்கள். இவர்களின் தூண்டுதலோடு போலீசார் ரஷீதை அடித்துக் கொன்றனர். எனவே வக்கீல்கள் சங்கம் நிர்பந்திக்கவே வழக்கை மத்தியப் புலனாய்வு துறையிடம் ஒப்படைத்தனர். விசாரணையில் ஜாலப்பா, நாராயணன் மற்றும் போலீசாரின் கொலைபாதகச் செயல் உறுதியானது. குற்றவாளிகள் கைதாகினர். ஆனால் ஜாலப்பா ஜாமீனில் விடப்பட்டுள்ளார். சாட்சிகளுக்கு விலைபேசும் வேலை மும்முரமாக நடக்கிறது. மாநில ஜனதா அரசுக்கு எதிராக நடக்கும் அரசியல் சதி என்று கூறி ஜாலப்பாவைக் காப்பாற்றுவதற்கு முயலுகிறார் ''பரிசுத்தம்'' ஹெக்டே.

ஃ ஃ ஃ

சில ஆண்டுகளுக்கு முன்பு சென்னைஅடையாறுக்கு அனாதையாகப் பிழைப்பு வேலை தேடி வந்தான் சிறுவன் சங்கர். அங்கே எடுபிடி வேலை செய்து பிழைத்தான். பிறகு சில ஆட்டோ டிரைவர்கள் உதவியால் தொழில் கற்று ஆட்டோ டிரைவராக வேலை செய்து பிழைத்தான். அப்போது சில விபச்சாரிகளின் சிநேகம் கிடைக்கவே விபச்சாரத் தரகனாவும் கள்ளச் சாராயம் கடத்துபவனாகவும் மாறி குறுக்கு வழியில் பணம் சேர்த்தான்.

பணம் சேர்ந்ததும் சொந்தமாக விபச்சார விடுதியும், கள்ளச் சாராயக் கடைகளும் வைத்தான். போலீசு அதிகாரிகளுக்கு மாமூலும் பரிசுகளும் ஏராளமாக வழங்கி தொழிலில் முன்னேறி லட்சாதிபதியானான். பிறகு போலீசு அதிகாரிகளை நெருங்கிய கூட்டாளிகளாகவும், ஓட்டுப் பொறுக்கி அரசியல்வாதிகளை வாடிக்கையாளர்களாகவும் பெற்றான். கோடிக் கணக்கில் சொத்து சேர்த்தான். இரவில் சென்னையை ஆளும் இரகசிய உலக ''மஃபியா'' படைத் தலைவர்களில் ஒருவனாக வளர்ந்தான். ஓட்டுப் பொறுக்கிஅரசியல்வாதிகளின் வார்த்தைகளில் சொன்னால் மாவீரன், தளபதி ஆனான். அதாவது 10, 20 அடியாட்கள் புடைசூழ சென்னை அடையாறு—திருவான்மியூர் வட்டாரத்தை ஆண்டான்.

இந்த மாத ஆரம்பத்தில் சங்கரும் அவனுடைய கூட்டாளிகளும் கைதாகி, சங்கர் கட்டிக் கொண்டிருந்த மாளிகையின் கீழ் இருந்து நான்கு அழுகிய பிணங்கள் தோண்டி எடுக்கப்பட்ட பிறகு பல திடுக்கிடும் தகவல்கள் வெளிவந்தன. சென்னைக்குக் காதலனுடன் ஓடிவந்து கைவிடப்பட்ட பெண்கள், மற்றும் சினிமா ஆசையோடு, குடும்பத் தகராறு காரணமாகவோ ஓடி வந்த பெண்களை சில ஆட்டோ டிரைவர்களை வைத்து கடத்தி விலைக்கு வாங்கினான். அவர்களை அடித்து மிரட்டி, துன்புறுத்திஆசைகாட்டி விபச்சாரத்தில் ஈடுபடுத்தினான். முழு நிர்வாண படங்கள் எடுத்தான். பெரிய அளவு கள்ளச் சாராயம் காய்ச்சி விற்றான். இதற்காக சென்னை நகரில் பல பங்களாக்களும் சாராயக் கடைகளும் வைத்துள்ளான். சென்னை அடையாறு பகுதியில் உள்ள ஒரு பெரிய ஓட்டலுக்கு சாப்பிட வரும் குடும்பத்தாரில் ஆண்களை அடித்து விரட்டி விட்டு, பெண்களை இழுத்துப் போய் க்றபழிக்கவும் விபச்சாரத்தில் ஈடுபடுத்தவும் செய்தான்.

சில மாதங்களுக்கு முன்பு சுடலை என்கிற அவனுடைய கூட்டாளியுடன் தகராறு ஏற்படவே அவனை உயிரோடு கொளுத்தி சாம்பலைக் கடலில் கரைத்துவிட்டான் சங்கர். சுடலையைத் தேடிப் போன மற்றொரு கூட்டாளி ஆட்டோ டிரைவர் ரவியை அடித்துக் கொன்று கட்டிடம் கட்டி வந்த இடத்திலேயே புதைத்தான். இரண்டு மாதங்களுக்கு முன்பு வேறு மூன்று கூட்டாளிகளுடன் தகராறு ஏற்படவே அவர்களையும் அடித்துக் கொன்று அங்கேயே புதைத்தான். இவர்களைக் காணவில்லை என்று புகார் கொடுத்த பிறகு சங்கரைக் கைது செய்த திருவான்மியூர் போலீசார் பிறகு அவனை விட்டுவிட்டனர். கொலை செய்யப்பட்டவர் குடும்பத்தினர் முயற்சியால் இரகசிய குற்றப் பிரிவினர் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சங்கரின் அடியாட்களை பிடித்து விசாரிக்கவே பல அதிர்ச்சியூட்டும் தகவல்கள் வெளிவந்தன. சங்கருக்கு தனித்தனி பங்களாக்களில் நான்கு பெண்டாட்டிகள்—வைப்பாட்டிகள். அதில் ஒருத்தியை தீயிட்டுக் கொளுத்திவிட்டு தற்கொலை செய்துகொண்டாள் என்றான். இன்னொருத்தி சுடலையுடன் ஓடிப்போய் பதிவுத் திருமணம் செய்து கொண்டதாக ஆத்திரமடைந்து சுடலையை எரித்துக் கொன்றான். ஓடிப் போனவளையும் சங்கரின் முழு நிர்வாணப் படத்தில் நடித்த ஒரு ஆங்கிலோ இந்தியப் பெண்ணையும், வாலிபனையும் கூட சங்கர்



பெங்களூர் துணை போலீசு கமிஷனர் நாராயணன்



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



கைது செய்யப்பட்ட சங்கர், ஜெயவேலு, பாபு.

கொன்றிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

சங்கரின் இந்த அட்டூழியங்களுக்கு எல்லாம் ''மாமூல்'' வாங்கிக் கொண்டு உடந்தையாய் இருந்த போலீசார் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிதிருவான்மியூர்வட்டார வியாபாரிகள் கடையடைப்பு செய்தனர். பரங்கிமலை டி. எஸ். பி. திருவான்மியூர் இன்ஸ்பெக்டர், இரு சப் இன்ஸ்பெக்டர்கள் சமூக விரோதி சங்கரின் சம்பளப் பட்டியலில் இருந்தனர். ஒரு அதிகாரிக்கு சென்னை அண்ணா நகரில் ஒரு பங்களாவையும் மற்றொருவருக்கு ஒரு லாரியும், மூன்றாமவர் மகனுடைய பிறந்த நாளில் விலை உயர்ந்த சங்கிலியும் வாங்கி பரிசு கொடுத்தான் சங்கர். கோடி கோடியாக சம்பாதித்த சங்கர் லட்சலட்சமாக மாமூல் கட்டினான். அவன் பிடிபட்ட பிறகு கூட சாட்சியங்களை மறைப்பதற்கு பரங்கிமலை டி. எஸ். பி. ஏற்பாடு செய்தார் என்று பத்திரிக்கைகள் எழுதுகின்றன.

அடையாறு-திருவான்மியூர் வட்டாரத்தில் மட்டும் 12 விபச்சார விடுதிகளும், ஏராளமான சாராயக் கடைகளும் நடந்து வருகின்றன என்கிறார்கள். போலீஸ் அதிகாரிகளைக் கைது செய்யும்படி மக்கள் கோரினாலும் மூன்று கீழ் நிலை அதிகாரிகளை இடமாற்றம் செய்துள்ளனர். இதுவும் கூட மக்கள் வெறுப்பிலிருந்து அவர்களை காப்பாற்றும் நடவடிக்கைதான். இந்த சமூகவிரோதக் கும்பலுடன்ஒட்டுப் பொறுக்கி அரசியல்வாதிகளுக்கு நெருங்கிய தொடர்பு இருக்கிறது என்றுபத்திரிக்கைகள் எழுதுகின்றன.ஆனால் யாருடையபெயரையும் வெளியிடாமல் இரகசியத்தைக் காக்கின்றன.

'என் கணவரைக் காணவில்லை' என்றுஜூ.வி.க்கு அழுதபடி வந்த பெண். அதையடுத்து துப்புத் துலங்கிய பயங்கர கொலைகள்!' என்று திருவான்மியூர் கொலைப் பற்றி எழுதிய ஜூனியர் விகடன், கட்டுரையின் முடிவில் ''தொடர்ந்து விசாரணை நடந்து வருகிறது. எனவே நம்மிடம் பல விஷயங்களைப் பிரசுரிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார் ஜாபர் அலி (டி.ஐ.ஜி)' என்று எழுதுகிறது. பல விஷயங்கள் என்பது, போலீசு அதிகாரிகள், ஒட்டுப் பொறுக்கிகள் கொலைகாரன் சங்கரின் அந்தரங்க கூட்டாளிகள் என்பதற்கு ஆதாரமாக பகுதி மக்கள் தரும விபரங்களைத்தான் எழுத வேண்டாம் என கேட்டுக் கொண்டிருக்கிறது போலீசு கும்பல். அதையும் பெருமையாகஎழுதி தன் விசுவாசத்தை நிரூபித்திருக்கிறது ஜூனியர் விகடன்.

திறமை வாய்ந்தவர்கள் தமிழக போலீசார் என்று பத்திரிக்கைகள் தொடர்ந்து பிரச்சாரம் செய்கின்றன. இப்படிப்பட்ட சமூக விரோதிகளை வளர்ப்பதும், காப்பதும், கூட்டுச் சேர்ந்து சமூக விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவதுதான் அவர்களுடை திறமை என்று சான்றுகள் கூறுகின்றன. பல சினிமா நடிகைகளின் கொலை, தற்கொலைகளுக்கும் சென்னையின் முக்கியப் புள்ளிகளுக்கும் தொடர்பு இருப்பதாக வரும் தகவல்களை போலீசார் மறுப்பதோ நடவடிக்கை எடுப்பதோ கிடையாது. சமூக விரோதி சங்கரைப் போலவே பெண்ணைக் கடத்தி கற்பழித்து,நிர்வாண சினிமா எடுத்த திவாகர்—சுமன் கும்பலை இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கைது செய்தனர். அந்த வழக்கைக் கிடப்பில் போட்டதோடு சுமனை மீண்டும் வெளியில் விட்டு அவன் ஆந்திராவில் பிரபல நடிகனாகித் தனது சமூகவிரோத வேலைகளைத் தொடர்கிறான். அதுவும்கூட டி. ஜி. பி. மோகன் தாஸ், சாராய உடையார் விவகாரங்களில் திவாகர்-சுமன் கும்பல் குறுக்கிட்டதால்தான் அவர்களை மிரட்டுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதேபோல ராபின்மெயின் தலைமையில் சென்னை அண்ணாநகரில் ஆட்சி நடத்தும் மஃபியா குண்டர்கள்—போலீசு கும்பல் மீதும் ஒரு நடவடிக்கையும் இல்லை.

சாராய உடையார், வரதராஜ முதலியார் போன்ற மஃபியா குண்டர் படைத் தலைவர்கள் இந்த சமூகத்தின் மதிப்புமிக்க நாயகர்களாக ஏற்றுக் கொள்ளப்படும் போது அவர்களைப் போன்ற வளரும் வாரிசுகள் மீது நடவடிக்கை எடுப்பார்களா? அதற்கு மாறாக அவர்களோடு சேர்ந்து ஒட்டுப் பொறுக்கி அரசியல்வாதிகளும், போலீசுக்காரர்களும் கூட்டுக் கொள்ளையில் ஈடுபடுவார்கள்; ஈடுபடுகிறார்கள்.

கேரள வக்கீல் ரஷீது கொலையும், திருவான்மியூர் கொலைகளும் கூறும் செய்திகள் இவைதான். ஒட்டுப் பொறுக்கி அரசியல்வாதிகளும் போலீஸ்காரர்களும், கிரிமினல் குற்றவாளிகளும் மிகமிக வலுவானதொரு சமூக விரோதக் கூட்டில் சேர்ந்துள்ளார்கள். நமக்கு எதற்கு வம்பு என்று உங்கள் வழியில் நீங்கள் போக முடியாது. அவர்கள் விரும்பும்போது உங்கள் மீது பாய்ந்து கொள்ளையடிப்பார்கள். கடித்துக் குதறுவார்கள். உங்கள் வீட்டுப் பெண்களை உரிமையோடு இழுத்துப் போவார்கள். ஆகவே நீங்கள் உங்களையும் உங்கள் குடும்பத்தையும் காப்பாற்றிக் கொள்ளவே இந்தச் சமூக விரோதக் கும்பலுக்கு எதிராக புரட்சிகர அமைப்புகளில் திரளவேண்டும்!

● மாணிக்கவாசகம்



படிப்பகம்

www.padippakam.com

கலப்புத் திருமணம் செய்து கொள்பவர்களுக்கு அரசாங்கம் தங்கப் பதக்கம் கொடுத்து கௌரவிப்பதாக அடிக்கடி பிரச்சாரம் செய்வதுண்டு. அரசே முன்முயற்சி எடுத்து சாதியை ஒழிக்க முயலுவதாக பாமர மக்களை நம்பவைக்க இப்படியும் ஒரு பம்மாத்து!

ஆனால், அரசும் அதன் ஒரு அங்கமுமான போலீசும் சாதிவெறியர்களின் அடியாள் படையாக இயங்கி கலப்புமணத் தம்பதிகளுக்கு இழைக்கும் கொடுமைகள் முடிவே இல்லாமல் தொடர்கிறது. சமீபத்தில் தங்கள் ஊரில் நடந்த் ஒரு சம்பவத்தை விவரிக்கிறார் தோழர் ஜெயசீலன்.

தஞ்சை மாவட்டம் ஆவாரம்பட்டி வீராச்சாமி—பொன்னுரங்கம் ஆகியோரின் மகள் அன்புமதிக்கும் அதே ஊரைச் சேர்ந்த சின்னய்யா—ரெங்கநாயகி ஆகியோரின் மகன் ராதாகிருஷ்ணனுக்கும் திராவிடர் கழக பொதுச் செயலாளர் கி. வீரமணி தலைமையில் தாலி போன்ற பிற்போக்கு சடங்கு ஏதும் இல்லாமல் 9-6-88 அன்று மாலை புரட்சிகரமான முறையில் திருமணம் நடந்தது. ஆனால் மணமகன் மேல்சாதி இந்து. மணமகள், அரிசன சாதியைச் சேர்ந்தவர் என்பதைக் காரணம் காட்டி திருமணம் நடந்த சில தினங்களில் இருவரும் பிரிந்து வாழ நிர்பந்திக்கப்பட்டனர். மணமகனை மிரட்டி அவருடைய வீட்டார் வெளியூருக்கு கடத்திச் சென்று விட்டனர். அதுமட்டுமல்ல, பூதலூர் போலீசு நிலைய சப் இன்ஸ்பெக்டர் பாலனையும் கைக்குள் போட்டுக் கொண்டனர்.

பாதிக்கப்பட்ட மணமகள் அன்புமதி தம் குடும்பத்தாருடன் நேரடியாக போலீசு நிலையம் சென்று எஸ். ஐ. பாலனிடம் புகார் மனு கொடுத்திருக்கிறார். கடத்திப் போன தம் கணவனை மீட்டுத் தரும்படி வேண்டியிருக்கிறார். ஆபாச வக்கிரப் புத்தி கொண்ட பாலன் தனக்கே உரிய தோரணையில் பெண்ணிடம் காதலுக்கான விளக்கத்தை விலாவரியாக கேட்டு ரசித்து அவமானப் படுத்தியதோடு ''நீங்கள் ஆளைக் காட்டுங்கள்; நாங்கள் பிடித்துக் கொடுக்கிறோம்'' என சொல்லி திமிராக சிரித்திருக்கிறார். இது வரை மணமகனை மீட்டுத்தரவோ அவரது வீட்டார் மீதோ எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை எஸ். ஐ. பாலன்.

திருமணத்தை முன்னின்று நடத்திய உள்ளூர் தி. க. அமைப்பாளர், 'சட்டப்படி இத்திருமணம் செல்லும், மணமகன் வீட்டார் ஏதும் செய்ய முடியாது' என விளக்கம் கொடுத்துக் கொண்டிருக்கின்றனரே தவிர, சாதி வெறியர்களுக்குத் துணைபோகும் பாலனை அம்பலப்படுத்தவோ, மணமகன் இருக்கும் ஊர் தெரிந்த பிறகும் அவரை மீட்டு வரவோ அமைப்பு ரீதியாக முயலவில்லை.

சாதிய நம்பிக்கையில் ஊறிப் போன மணமகன் வீட்டார், சாதி வெறி பிடித்த எஸ். ஐ. பாலன் துணைக்கு இருக்கும் தைரியத்தில் மணமகனுக்கு உடனடியாக மறு திருமணம் செய்ய அலைகின்றனர்.

முற்போக்கு எண்ணமும் மிரட்டலுக்கு பணியாத தைரியமும் கொண்ட மணமகள் அன்புமதி இப்போது ஆதரவின்றி நட்டாற்றில் விடப்பட்டவராக தத்தளிக்கிறார். 'மார்க்சிஸ்ட்' கட்சியைச் சேர்ந்த பகுதி தலைமையோ, 'இது சாதி பிரச்சினை. இதில் எந்த பிரிவுக்கும் ஆதரவளிக்க முடியாது' என முடிவெடுத்து தங்களுடைய அரசியல் அலித்தனத்தை வெளிச்சம் போட்டு காட்டிக் கொண்டது. விவசாயிகள் விடுதலை முன்னணி அமைப்பு தோழர்கள், போராடும் பெண் வீட்டு குடும்பத்தாரின் பக்கம் நின்று அவர்களின் நியாயத்தை பகுதி மக்களிடம் பிரச்சாரம் செய்து வருகின்றனர்.

தகவல்: ஜெயசீலன்
வி. வி. மு.
திருவையாறு ஒன்றியம்.



# சாதிய விலங்குகளைத் தகர்ப்போம்!

சாதி—மத அவமானச் சின்னத்தை அழிப்போம் என்ற உங்களது அறைகூவலைப் படித்தோம். எங்களின் பெண் குழந்தை 'அறிவு மணி'யை ஊத்தங்கரை தொடக்கப் பள்ளியில் சேர்ப்பதற்கு முன்னால், இப்பள்ளியின் ஆசிரியரிடம் சாதி—மதத்தோடு இணைக்காமல் சேர்ப்பது பற்றி விவாதித்தோம். சட்டப்படி சாதி—மதம் இல்லாமல் சேர்ப்பதில் தடையேதும் இல்லை; சேர்க்கலாம் என்று அவர்கள் உறுதி கூறிய பின்னரே அறிவு மணியை பள்ளியில் சேர்த்தோம். புதிய ஜனநாயகப் புரட்சியின் ஒரு அங்கம் என்ற முறையில் நிலப்பிரபுத்துவ - பார்ப்பனீய அடிமைச் சின்னமான சாதிமத ஒழிப்பை புதிய ஜனநாயக வாசகர்கள் உறுதியுடன் கடைபிடித்தால், இதை முன்மாதிரியாகக் கொண்டு சாதி—மத ஒழிப்பில் அக்கறையுள்ள அனைவரும் இதை நிச்சயம் பின்பற்றுவர்.

சந்திரமோகன்—கீதா,
ஊற்றங்கரை.

ஓட்டுப் பொறுக்கிகள் சர்வ சாதாரணமாக தமிழக மக்களின் காதுகளில் பூ சுற்றுகின்றனர் என்றால் கருணாநிதி காதில் ஒரு பூந்தோட்டத்தையே வைக்கிறார். 'பார்ப்பனர்கள் மனிதர்களே அல்ல. திமுகவில் பார்ப்பனர்களுக்கு இடமில்லை' என்று வெறித்தனமாக பேசிச் செயல்பட்டு வந்த இந்தப் 'பகுத்தறிவுச் சிங்கம்' இப்போது தன் பேச்சைக் கேட்கும் பார்ப்பனர்கள் 'பச்சைத் தமிழர்'களாக மாறும் அதிசயத்தை அறிவித்திருக்கிறார்.

இன்று ஜெயலலிதா, ஜானகி போன்ற பார்ப்பன சக்திகளின் பின்னே பார்ப்பனர்களின் மொத்த ஓட்டும் போய்விடும் அபாயத்தைக் கண்டு அஞ்சி, சினிமா நடிகன் கமலஹாசனின் தந்தை சீனிவாச அய்யங்கார் 'பச்சைத் தமிழன்' என்ற அரிய கண்டுபிடிப்பை வெளியிட்டிருக்கிறார். ஏனென்றால் அவர் 'கலைஞ'ரது பேச்சை ராப்பகலாக ராமநாதபுரத்தில் விரும்பிக் கேட்பாராம்!

சாதி—மதவாத சக்திகளை எதிர்த்துப் போராட வக்கற்ற இந்த 'பகுத்தறிவு பகலவன்' இன்று பார்ப்பன—முஸ்லிம் மதவாதிகளின் காலைப் பிடிக்க ஆரம்பித்திருக்கிறார். எச்சில் இலைக்குப் போட்டி போடும் நாய்களுக்கு இலையிலுள்ள சோறுதான் முக்கியம். கருணாநிதிக்கு ஓட்டுதான் முக்கியம். அதைப் பெறுவதற்கு எந்த வேஷமும் போடவும் அவருக்குத் தெரியும். ஆனால் மனிதனை மனிதனாகப் பார்க்கத் தெரியாத கருணாநிதியின் பூ சுற்றலுக்கு காதைக் காட்டுவதற்கு உழைக்கும் மக்கள் இளிச்சவாயர்களல்ல.

—எஸ். சுந்தரராஜன்
அம்பத்தூர்



படிப்பகம்

# 'குண்டு' அரசியலும் 'கூட்டு' அரசியலும் இருண்ட சக்திகள்

"குண்டு" அரசியலும் "கூட்டு" அரசியலும் நடத்தி தமிழகத்தில் அரசியல் செல்வாக்கும் பெற்றுவிட முடியும் என்றுஇரண்டு பிரிவினர் கிளம்பியுள்ளனர். "தமிழ்நாடு புலிகள்", இந்தியத் தமிழர் விடுதலை ராணுவம்" போன்ற வெவ்வேறு பெயர்களில் இயங்கும் தனித்தமிழ்நாடு பிரிவினை கோரும் இனவாதிகள் ஒரு பிரிவினர். கேடயம்—மனஓசை கும்பல், இந்திய மக்கள் முன்னணி இன்னும் பல பெயர்பலகை அமைப்புகளின் மூலம் இயங்கும் "பாசிச சுயேச்சதிகார எதிர்ப்பு ஜனநாயகவாதிகள்" மற்றொரு பிரிவினர்.

எப்படியாவது பிரபலமடைந்துவிட வேண்டும் என்றுதான் இந்த இரு பிரிவினரின் நோக்கம். என்றாலும் இவர்களின் நடைமுறையும் உடனடி விளைவுகளும் வேறுவேறானவைதான். ஆனாலும் இவ்விருபிரிவினரின் நடவடிக்கைகளினால் மார்க்சிய—லெனினிய, கம்யூனிச புரட்சிகர இயக்கத்துக்குத்தான் கூடுதலான ஊறு ஏற்படும். புரட்சிகர இயக்கத்தைத் தாக்கி அழிக்கவும், அவதூறு கிளப்பி தனிமைப்படுத்தவும் நேரடியாகவும் மறைமுகமாகவும் எதிரிகளுக்குப் பயன்படும்.

## இனவாதிகளின் குண்டு அரசியல்

சென்னை கத்திப்பாரா சந்திப்பில் உள்ள நேரு சிலையின் பீடம், கொடைக்கானல் வானொளி நிலைய மதிற்சுவர், ஊட்டி பூங்கா, கோவை மாவட்ட போலீஸ் அதிகாரி அலுவலகம் ஆகிய நான்கு இடங்களில் கடந்த மூன்று மாதங்களில் குண்டுகள் வெடித்துள்ளன. இதற்கு முன்பு திருவையாறு குடமுருட்டி பாலம், அரியலூர் மருதையாற்றுப் பாலம், ஆகிய இடங்களிலும் குண்டுகள் வெடித்துள்ளன. திருச்சி—தென் ஆற்காடு மாவட்டங்களில் சில வங்கிக் கொள்ளைகள் நடந்துள்ளன.

இவற்றிலே அரியலூர் மருதையாற்றுப் பாலகுண்டு வெடிப்பினால் திருச்சி மலைக்கோட்டை ரெயில் கவிழ்ந்து 24 பயணிகள் மாண்டு போயினர். கொடைக்கானல் வானொளி நிலையத்துக்கு குண்டு வைக்க முயன்ற மாறன் அதற்கே பலியானார். பொன்பரப்பி வங்கிக் கொள்ளையின் போது தமிழரசன்உட்பட ஐந்து பேர் போலீசு உளவாளிகள் மற்றும் அவர்களுக்கு உடந்தையானவர்களால் கொல்லப் பட்டனர்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பும் தமிழ்நாட்டின் பல்வேறு www.padippakam.com இடங்களிலும் குண்டுகள் வெடித்து சில அப்பாவிகள் மாண்டனர். தொடர்ந்து பல குண்டுப் புரளிகளும் பீதிகளும் கிளம்பின. அப்போதைய குண்டு வெடிப்புகளுக்கும், புரளிகளுக்கும் யாரும் உரிமை பாராட்டவில்லை. அவை பெரும்பாலும் இந்திய உளவுப் படையினரின் சதி வேலைகள் தாம். எனவேதான் தொடர்ந்து அந்த வழக்குகளை ஆய்வுசெய்து குற்றவாளிகளைப் பிடிக்கவோ, தண்டிக்கவோ அரசு அக்கறை காட்டவில்லை.

ஆனால் கடந்த மூன்று மாதங்களில் நடந்த குண்டு வெடிப்புகள் மற்றும் வங்கிக் கொள்ளைகள் தம்முடைய சாதனைகள்தான் என்று "இந்தியத் தமிழர் விடுதலை ராணுவம்" "தமிழ்நாடு புலிகள்" ஆகிய அமைப்புகள் உரிமை பாராட்டிக் கொள்கின்றன. குண்டு வெடிப்புகளினால் தமிழக மக்களின் கவனத்தை ஈர்த்து, தமது அமைப்பையும், கோரிக்கைகளையும் பிரபலப்படுத்துவதுதான் தமது நோக்கம் என்று அவர்கள் கூறுகிறார்கள். ஈழத்திலிருந்து இந்திய இராணுவத்தை விலக்கிக் கொள்வது, வானொலியும் வானொளியும் செய்யும் பொய்ப் பிரச்சாரங்களை நிறுத்துவது போன்றவை தமது உடனடிக் கோரிக்கை; டெல்லி "மார்வாடி—ஜாட்" ஆதிக்கத்திலிருந்து பிரிந்து தனித் தமிழ்நாடு அடைவது தமது இறுதிஇலட்சியம் என்று கூறுகிறார்கள்.

இந்த நடவடிக்கைகளினால் சிலர் தியாகினார்கள்; அரியலூர் மருதையாற்றுப் பால ரெயில் கவிழ்ப்பில் அப்பாவி மக்கள் இறந்ததற்கு தாங்கள் பொறுப்பல்ல; குண்டு வெடிப்புக்கு முன்னும் பின்னும் எச்சரித்தும்ரயில்வே அதிகாரிகளின் தவறுகளினால் தான் விபத்து நேர்ந்தது என்கிறார்கள் இனவாதிகள். ஆனாலும் ஆயுதப் போராட்டத்தின் மூலம் தனித்தமிழ் நாடு அடைவதுதான் தமது பாதை; அதற்கு முதற்படியாக இனதுரோகிகளை ஒழித்துக் கட்டுவோம் என்கிறார்கள். இதையெல்லாம் தமது "மிரட்டல்" கடிதங்கள், குண்டு வெடித்த இடங்களில் வீசப்படும் சுவரொட்டிகள், பிரசுரங்களில் கூறியுள்ளனர். முகவரியில்லாத கடிதங்கள் மூலம் பத்திரிக்கைகளுக்கு எழுதுகிறார்கள்.

## இனவாத குழுக்கள்

குண்டு வெடிப்புகளுக்கும், வங்கிக் கொள்ளைகளுக்கும் உரிமை பாராட்டிக் கொள்ளும் "தமிழ்நாடு புலிகள்", "இந்தியத் தமிழர் விடுதலை இராணுவம்" ஆகிய குழுக்களுடன் உலகத் தமிழின முன்னேற்றக் கழகம், தமிழின விடுதலைக் கழகம் திருவள்ளுவர் கழகம் போன்ற அமைப்புகள் தொடர்பு வைத்திருப்பதாக போலீசார் கூறுகிறார்கள். இந்த அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் உட்பட 43 பேரை இதுவரை கைது செய்துள்ளனர். வங்கிக் கொள்ளைக்குக் காரணமானவர்கள் என்று 15 பேரைக் கைது செய்துள்ளனர். இவர்களில் சிலர் ஈழ அமைப்புகளையும், தன்னார்வக் குழுக்களையும் சேர்ந்தவர்கள்.

இந்தக் குழுக்கள் தவிர மார்க்சிய—பெரியாரிய பொதுவுடமைக் கட்சி, அறிவியக்கப் பேரவை போன்ற குழுக்களும் கில தனிநபர்கள் நடத்தும் சிறு பத்திரிக்கைகளும் தனித் தமிழ்நாடு பிரிவினை கோருபவர்கள். தமது கோரிக்கையை அடைவதற்கு ஆயுதப் போராட்டமே தம்து பாதை என்று அவர்கள் பகிரங்கமாக அறிவிக்கவோ, செயல்படவோ இல்லை. பத்திரிக்கைகள், கருத்தரங்கு—மாநாடு, ஊர்வலம் ஆகிய முறைகளையே பின்பற்றுகிறார்கள்.

"மார்க்சியத்தையும் பெரியாரியத்தையும்" வெவ்வேறு அளவுகளில் கலந்து பல ஒட்டுரகங்களைக் கொண்ட சித்தாந்தங்களை இந்த அமைப்புகள் தமது வழிகாட்டுதல்களாகக் கொண்டுள்ளன. இந்த நாட்டிலுள்ள சாதி, மத, இனப் பாகுபாடுகள் உலகில் வேறு எங்குமே இல்லாதவை; வித்தியாசமானவை. தனிச் சிறப்பானவை. எனவே மார்க்சியம் இதற்குப் பொருந்தாது; பெரியாரியமே இந்திய மார்க்சியம் அல்லது பெரியாரியத்துடன் இணைந்த மார்க்சியத்தைப் பிரயோகிக்க வேண்டும். அந்த அடிப்படையில் தனித் தமிழ்நாடு அடைவதும் அது பொதுவுடமை அமைப்பாக இருப்பதும்தான் சரியானது என்று இவர்கள் வாதிடு



படிப்பகம்

கிறார்கள்.

மார்க்சிய—லெனினியப்புரட்சிகர இயக்கத்திலிருந்து இனவாதிகளாகவும் ஓடுகாலிகளாகவும் சீரழிந்துபோன சிலர் தனித் தமிழ்நாடு என்கிற முழக்கத்தை எடுத்துக் கொண்டார்கள். அவர்களில் இருவர்தான் தென் ஆற்காடு மாவட்டம் புலவர் கலியப்பெருமாளும் தமிழரசனும். கம்யூனிச இயக்கம் வளர முடியாமற்போனதற்கும், திராவிட இயக்கம் வெற்றி பெற்றதற்கும் காரணம் தேசிய இனப்பிரச்சினைகள்; இந்தியாவிலுள்ள ஒவ்வொரு தேசிய இனமும் பிரிந்து போவதற்காக புரட்சி செய்யவேண்டும் என்பதுதான் இவர்களுடையநிலைப்பாடு. மார்க்சிய—லெனினிய புரட்சிகர இயக்கத்தில் இருந்தபோதே இவர்களுடைய தனிநபர் பயங்கரவாதக் கண்ணோட்டமும், பிரிவினைவாதமும் தவறென்று விமர்சித்து நிராகரிக்கப்பட்டு விட்டன.


தனித் தமிழ்நாடு பிரிவினைக் கோரிக்கை மீண்டும் உயிர்ப்பிக்கப்படுவதற்கும், அதற்காகப் பல அமைப்புகள் முளைத்திருப்பதற்கும் காரணம் ஈழ விடுதலை இயக்கத்தின் தாக்கமாகும். அது மிகக் குறுகிய காலத்தில் வளர்ந்து பெரும் செல்வாக்குப் பெற்றது, ஈழ விடுதலை இயக்கத்துக்குத் தமிழ்நாட்டு மக்களிடையே திரண்ட ஆதரவு; அதற்கு எதிராக பாசிச ராஜீவ் கும்பல் துரோகம், ஆக்கிரமிப்பு ஆகியவற்றினால் தமிழ் நாட்டு இளைஞர்களிடையே எழுந்துள்ள வெறுப்பு இவைகளைக் கண்ட இனவாதிகள் தமிழ் நாட்டிலும் பிரிவினைக் கோரிக்கை விரைவாக வளரும்; திராவிட இயக்கங்களின் செல்வாக்கு இதற்கும் உதவும் என்று நம்புகிறார்கள்.

திராவிடர் கழகத்திலிருந்து இளைஞர்களில் ஒரு சிறுபிரிவினர் இந்த பிரிவினைவாதக் குழுக்களுக்குப் போய் விட்டார்கள். மற்றொரு பிரிவினர் மார்க்சிய—லெனினிய புரட்சிகர இயக்கத்துக்கு வந்து விட்டார்கள். திராவிடர் கழகம் இப்படி கரைவதால் அதுவும் இனவிடுதலைக்குப் போராடுவதாக அவ்வப்போது கூறிக் கொள்கிறது. ஆனால் தனித் தமிழ்நாடு பிரிவினையில் கொஞ்சமும் நம்பிக்கையில்லாத முழுக்கவும் பிழைப்புவாதக் கட்சிதான் திராவிடர் கழகம்.

## இனவாதிகளும் புரட்சியாளர்களும்

இனவாதிகளின் தனிநபர் பயங்கரவாதத்தையும், பிரிவினைவாதத்தையும் மார்க்சிய லெனினியப் புரட்சியாளர்கள் நிராகரிக்கிறார்கள். தமிழ், மராத்தி—வங்காளி, காஷ்மீரி போன்ற பல்வேறு தேசிய இனங்களை உள்ளடக்கியது இந்தியநாடு. மத்தியில் ஆளும் தரகு அதிகார முதலாளிகள் நிலப்பிரபுக்களின் அரசு இந்தத் தேசிய இனங்களை அடக்கி ஒடுக்குகிறது. எனவே ஒவ்வொரு தேசிய இனத்துக்கும் பிரிந்துபோகும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமை வேண்டும். **மார்க்சிய—லெனினியக் கட்சியின் தலைமையிலான புதிய ஜனநாயகப் புரட்சியின் மூலம்தான் அந்த உரிமையை அடைய முடியும்** ஆனால் இப்பொழுதே சுயநிர்ணய உரிமைக்காக எந்த ஒரு ஒடுக்கப்பட்ட தேசிய இனம் போராடினாலும் மார்க்சிய—லெனினியக் கட்சி ஆதரிக்கும். இந்த அடிப்படையில்தான் நாகா, மிஜோ போன்ற தேசிய இனங்கள் ஆயுதந்தாங்கிப் போராடுவதையும் ஆதரிக்கிறது.

இனவாதிகளை "நக்சல்பாரிகள்" என்று சொல்லி நக்சல்பாரி இயக்கத்துக்கெதிராக மக்கள் மத்தியில் அவதூறு செய்கிறார்கள். தமிழரசன், கலியபெருமாள் போன்ற ஒரு சிலர் முன்பு மார்க்சிய—லெனினியப் புரட்கிகர இயக்கமான நக்சல்பாரி இயக்கத்தில் இருந்தார்கள் என்பது உண்மைதான். ஆனால் பிறகு அதன் நிலைப்பாடுகளையும் நடைமுறைகளையும் நிராகரித்துவிட்டு நக்சல்பாரி இயக்கத்திலிருந்து விலகிப்போய்த்தான் தனியே இயங்கி பிரிவினைவாதம் மற்றும் தனிநபர் பயங்கரவாதத்தை மேற்கொண்டார்கள். நக்சல்பாரி இயக்கமும் அவர்களையும் அவர்களுடைய நிலைப்பாடுகளையும் நடைமுறைகளையும் நிராகரித்து விட்டது. இது அரசுக்கும் அதன் உளவுப் படைக்கும், பத்திரிக்கைகளுக்கும் நன்கு தெரிந்த உண்மைதான்! இருந்தாலும் வளர்ந்துவரும் நக்சல்பாரி புரட்சிகர இயக்கத்தை ஒடுக்கவும் அவதூறு செய்து தனிமைப்படுத்தவும் தமிழரசன்போன்ற இனவாதிகளுடன் நக்சல்பாரி இயக்கத்தைப் பிணைத்து அவர்கள் பொய்ப் பிரசாரம் செய்கிறார்கள்.



அரியலூர் மருதையாற்றுப் பாலகுண்டு வெடிப்பினால் திருச்சி மலைக்கோட்டை ரெயில் கவிழ்ந்து 24 பயணிகள் மாண்டு போயினர்.

ஆயுதந்தாங்கிய விடுதலைப் போராட்டம் என்கிறபோது ஆயுதந்தாங்கிய மக்கள் திரள் எழுச்சியையும், எதிரியின் ஆயுதப்படைகளுக்கு எதிரான போரையும் தான் புரட்சிகரமானதாகக் கருத முடியும். தனிநபர் பயங்கரவாத சாகச நடவடிக்கைகள் புரட்சிகரமானவை அல்ல. தனிநபர் கொலைகளை அரசியல் இயக்கமாகக் கருதமுடியாது. அதுவும் அப்பாவி மக்களைக் காவு கொள்ளும் அரியலூர் குண்டு வெடிப்பு போன்ற சாகசங்களும் புரட்சிக்கு எதிரான விளைவுகளையே ஏற்படுத்தும்.

இனவாதிகளின் தனிநபர் பயங்கரவாத சாகசவேலைகளை மார்க்சிய—லெனினிய புரட்சிகர இயக்கத்தைத் தாக்கவும். அவதூறு செய்யும் எதிரிகள் பயன்படுத்திக்கொள்ளுகிறார்கள். இந்த

திருவையாறு குடமுருட்டி பாலத்திற்கு இனவாதிகள் குண்டு வைத்தவுடன் அந்தச் சம்பவத்தோடு எந்த வகையிலும் சம்பந்தமில்லாத மக்கள் கலை இயக்கக் கழகம் மற்றும் விவசாயிகள் விடுதலை முன்னணி ஆகிய புரட்சிகர அமைப்புகளுக்கு எதிராக போலீசார் தாக்குதலும் அவதூறும் தொடுத்தனர். இந்த அமைப்புகளின் தோழர்களைப் பிடித்துப் போய் பொய் வழக்குப் போட்டனர். தமிழரசனின் குழுவைச்



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

சேர்ந்த மணிநாதன் என்பவர் கைதாகி கீழ்க் கோர்ட்டிலேயே அவருக்கு ஜாமீன் கொடுத்தும், பல சலுகைகள் தருவதாகவும் கூறி அப்ரூவராக்கப்பட்டார்.

குண்டு வைப்பில் தமிழரசனுக்கும்மணிநாதனுக்கும்உதவியாதகப் பொய் வழக்குப் போடப்பட்ட திருவோணம் துரைமாணிக்கம் மற்றும் திருக்காட்டுப்பள்ளி ஜெயசீலன் ஆகிய விவசாயிகள் விடுதலை முன்னணித் தோழர்களின் வீடுகளைப் போலீசார் சூறையாடினர். சென்னை உயர்நீதிமன்றம் வரை போயும் அவர்களை ஜாமீனில் விட மறுத்தனர். பல மாதங்கள் நிபந்தனை ஜாமீனில் வைத்தனர். இப்போது போலீசார் தொடுத்துள்ள பொய் வழக்கில் அவர்களிடம் எச்சில் காசு வாங்கிக்கொண்டு புரட்சிகரத் தோழர்களுக்கு எதிராக நடக்கும் வழக்கில் பொய் சாட்சி சொல்லிக் கொண்டிருக்கிறார் மணிநாதன். ஆயுதந்தாங்கித் தனித் தமிழ்நாடு கோரிப் புறப்பட்டவரின் இன உணர்வு இதுதான்?

அதேபோல அரியலூர் குண்டு வெடிப்பு—ரயில் கவிழ்ப்பிற்குப் பிறகு அதற்குக் காரணமாயிருந்த இனவாதிகளோடு எவ்விதத் தொடர்பும் இல்லாத கடலூர் மக்கள் கலை இலக்கியக் கழகச் செயலர் மோகன், விவசாயிகள் விடுதலை முன்னணித் தோழர்கள் மற்றும் பிற புரட்சிகர அணிகளைப் பிடித்துப் போய் அரசு உளவுப் படையினர் சித்திரவதை செய்தனர். ''உங்களுக்கு இதில் சம்பந்தமில்லை என்று எங்களுக்குத் தெரியும். ஆனால் உங்களை ஒடுக்குவதற்கு இது ஒரு நல்ல வாய்ப்பு'' என்று சொல்லியே அத்தோழர்களைத் தாக்கினர்.

ஆக, இனவாதிகளின் தனிநபர் பயங்கரவாத சாகசங்களின் விளைவாக சுய அழிவும், மக்களிடமிருந்து தனிமைப்படுவதால் ஒடுக்கப்படும் இனங்களின் சுயநிர்ணய உரிமை என்கிற நியாயமான கோரிக்கையும் வலுவிழப்பதும் நடக்கிறது. இது புலி[...] மலைப் [...] நாளும் குடுபோட்டுக் கொண்டு வரிகளை ஏற்படுத்த முயலுவதாகிறது. அது மட்டுமல்ல மார்க்சிய—லெனினிய புரட்சிகர இயக்கத்தைத் தாக்கவும் அவதூறு செய்யவும் எதிரிகளுக்கு உதவுகிறது.

## கூட்டு அரசியலும் குறுக்குவழியும்

''குண்டு', அரசியலைப் போல பிரபலமானதோ, பரபரப்பானதோ அல்ல இந்த 'கூட்டு' அரசியல் நடவடிக்கைகள். கடந்த ஐந்தாண்டுகளாக முயன்று தோற்றுப் போனாலும் இப்போது கொஞ்சம் சூடேற்றிக் கொண்டு திரும்பியிருக்கின்றன. நாளும் தனிமைப்பட்டு வரும் பாசிச ராஜீவ் கும்பல் அடுத்தடுத்துப் பல கருப்புச் சட்டங்களால் தன்னை ஆயுதபாணியாக்கிக் கொள்கிறது. இலங்கை படையெடுப்பு-யாழ்ப்பாண போரைத் தொடர்ந்து, ஈழப் பிரச்சினையில் அதன் அக்கிரமங்கள் எல்லை மீறிவிட்டன. தேர்தலைக் குறிவைத்து தமிழகத்திற்கு பாசிச ராஜீவ் அடிக்கடி வரும்போது காற்றசைந்தாலும் அஞ்சி அடக்குமுறைகளை ஏவி விடுகிறது; பாதுகாப்பைக் காரணங்காட்டிப் பலரைக் கைது செய்கிறது. இவற்றுக்கு எதிராக ஈழ ஆதரவு, பாசிச-சுயேச்சதிகார எதிர்ப்பு, ஜனநாய உரிமை பாதுகாப்பு ஆகிய பெயர்களில் சில 'கூட்டு' நடவடிக்கைகள் ஏற்பாடு செய்யப்பட்டு நடக்கின்றன.



தொடர்ந்து பாசிச பாதந்தாங்கிகளாக இருந்த கிருஷ்ண அய்யரும் நெடுமாறனும் இப்போது ''பாசிச எதிர்ப்பு ஜனநாயக உரிமை'' பற்றிப் பேசுகிறார்கள்.



கலாச்சார பண்பாட்டு அமைப்புகள், உரிமைக் கழகங்கள், இன விடுதலை-நட்புறவு அமைப்புகள் மற்றும் பல பெயர் பலகை அமைப்புகள் சேர்ந்து நடத்துபவைதாம் இந்தக் 'கூட்டு' நடவடிக்கை அரசியல். சில மாஜிப் புரட்சியாளர்கள், பத்திரிக்கைப் பிரபலங்கள் போன்ற தனி நபர்களும் இவற்றில் தவறாது முன்னிலை வகிக்கிறார்கள். பல பத்துப் பெயர்களில் நடக்கும் இந்தக் கூட்டு நடவடிக்கைகளின் மையமாக இருந்து இயக்குபவர்கள் மனஓசை-கேடயம் கும்பலும் இந்திய மக்கள் முன்னணியினரும்தான்.

மிகவும் பரந்து விரிந்த ஆதரவு பெற்றவை, எல்லோரையும் அரவணைத்துக் கொண்டுபோகும் ஜனநாயக இயக்கம் என்கிற தோற்றத்தைக் கொடுப்பதற்காகவே பிரபலங்களையும் பெயர் பலகை அமைப்புகளையும் தேடிச் சேர்த்துக் கொள்ளுகிறார்கள். இதுவரை ஊர்வலங்கள், பிரசுரம், சுவரொட்டிகள், கூட்டறிக்கைகள், பொதுக்கூட்டங்கள், கருத்தரங்குகள் என்ற வடிவத்திலிருந்து இந்த 'கூட்டு' இப்போது கேடயம்-மன ஓசை கும்பல் நடத்தும் மாநாட்டில் குழுமியிருக்கிறது.

மிகக் கொடிய அமைப்பான பாசிசத்தை எதிர்த்து முறியடிக்க வேண்டுமானால் உருக்கு போன்ற பாட்டாளி வர்க்கப் புரட்சியாளர்களின் ஐக்கியமும் அதைச் சுற்றி உண்மையான ஜனநாயக சக்திகளையும் திரட்டி உறுதிப்படுத்த வேண்டும். அதை அடிப்படையாகக் கொண்டுதான் தற்காலிகமான, ஊசலாடக்கூடிய நட்பு சக்திகளோடு கூட்டு சேர்ந்து பாசிசத்தை எதிர்த்திட முடியும். அப்பொழுதுதான் பாசிசத்தின் பயங்கரவாதத்துக்கு எதிராக தொடர்ந்து உறுதியாக உண்மையாகப் போராட முடியும்.

ஆனால் பாசிச—சுயேச்சதிகார எதிர்ப்பு, ஜனநாயக உரிமை பாதுகாப்பு என்கிற பெயரில் இப்போது நடக்கும் கூட்டு நடவடிக்கைகள் மார்க்சிய—லெனினிய புரட்சிகர இயக்கத்தின் துரோகிகள், ஓடுகாலிகளை அடிப்படையாகக் கொண்டது அரசியல் பிழைப்புவாதிகளான ஓட்டுப் பொறுக்கிகள், ஏகாதிபத்தியக் கைக்கூலிகளான தன்னார்வக் குழுவினர் போன்றவர்களால் சூழப்பட்டது. எப்படியாவது சீக்கிரம் பிரபலமாகி ஓட்டுப்பொறுக்கி அரசியலில் குதித்துவிட வேண்டும் என்கிற ஆவசரத்தில் இந்தக் கூட்டு நடவடிக்கைகளை அவர்கள் நடத்துகிறார்கள். இந்திய மக்கள் முன்னணி ஏற்கனவே அதில் குதித்துவிட்டது. கேடயம்-மனஓசை கும்பல் பலம் பெறுவதற்காகக் காத்திருக்கிறது. இதே நோக்கத்தோடுதான் இப்போது அவர்கள் இந்த மாதிரியான கூட்டு நடவடிக்கைகள் என்கிற குறுக்கு வழியைத் தெரிந்தெடுத்திருக்கிறார்கள்.

### கூட்டாளிகளின் முகவிலாசங்கள்

பாசிச—சுயேச்சதிகார எதிர்ப்புக் கூட்டாளிகளின் முகவிலாசங்கள் அவர்களைக் காட்டிக்கொடுத்து விடுகின்றன. 'கூட்டு' நடவடிக்கைகளின் பிரதான குழுவான கேடயம்-மனஓசை கும்பல் தமது சகபாடிகளான இந்திய மக்கள்



படிப்பகம்

முன்னணியினரின் அரசியல் தலைமையைப் பற்றி ஆறு மாதங்களுக்கு முன்பு என்ன எழுதியது? ““அது ரசிய சமூக ஏகாதிபத்தியத்தின் மற்றும் ஒரு எடுபிடியாக (ஏற்கனவே இ பொ க, இ பொ க (மா) இருக்கின்றன) மாறியிருக்கிறது என்பதும், முற்றிலும் ஒரு துரோகியாக, ஓடுகாலியாக சீரழிந்திருக்கிறது என்பதும் நிருபணமாகியிருக்கிறது’’ கேடயம் (16—31 ஜனவரி 1988).

பாசிச ராஜீவ் கும்பலைத் தூக்கிப் பிடிக்கிறது ரசிய சமூக ஏகாதிபத்தியம் (கேடயம் ஜூன் ’88). அதன் எடுபிடியாக மாறிவிட்ட முற்றிலும் ஒரு துரோகியாக ஓடுகாலியாக சீரழிந்து விட்ட தலைமையிலுள்ள இந்திய மக்கள் முன்னணியுடன் கூட்டுச் சேர்ந்து பாசிச எதிர்ப்பு இயக்கம் நடத்துகிறார்களாம்! அது மட்டுமல்ல, ஏகாதிபத்தியக் கைக்கூலிகளான தன்னார்வக் குழுக்களின் கூடாரம் தான் இந்திய மக்கள் முன்னணி. புதிய கலாச்சாரம் புதிய ஜனநாயகத்தால் இந்த உண்மை நிருபிக்கப்பட்டபின்அவர்களேவாய்பொத்திக் கிடக்கிறார்கள்.

ஓராண்டுக்கு முன்பு இந்தத் தன்னார்வக் குழுக்கள் பற்றி கேடயம்—மனஓசைகும்பல் என்ன எழுதியது? ““மொத்தத்தில் இந்தத் தன்னார்வக் குழுக்கள் நம் அருமை நாட்டைப் பற்றி உளவு சொல்லும் தேச விரோதிகளாக உள்ளனர். நிலவும் சமூகத்தைக் கட்டிக் காப்பதற்கான வேலைகளை செய்வதன் மூலம் சமூக விரோதிகளாக உள்ளனர். இளைஞர்களை, மாணவர்களை சமூக மாற்றத்திற்கான, விடியலுக்கான பாதையில் செல்ல விடாமல், அவர்களது புரட்சிகர குணாம்சங்களை மழுங்கடித்து திசை திருப்பும் எதிர்ப் புரட்சிகர வேலையை செய்கின்றனர். அந்நிய நிறுவனங்கள் வீசும் எலும்புத் துண்டுகளுக்காக இத்தனை துரோகங்களையும் செய்யும் மக்கள் விரோதிகளாகவும் செயல்பட்டு வருகின்றனர்’’ (கேடயம் 1—15 ஜூன் 1987).

ஏகாதிபத்தியங்களுக்கு உளவு சொல்லும் தேசவிரோதிகள் சமூக விரோதிகள். எதிர்ப் புரட்சியாளர்கள், மக்கள் விரோதிகளான தன்னார்வக் குழுக்களின் கூடாரமாக உள்ள இந்திய மக்கள் முன்னணி தான் ‘பாசிசஎதிர்ப்புஇயக்க’த்தில் கேடயம்—மனஓசை கும்பலின் சகபாடி. அதுமட்டுமல்ல தன்னார்வக் குழுக்களின் மூளையாக இருந்து இயங்கும் ஹென்றி திபங்கே, எஸ்.வி. ராஜதுரை மற்றும் அவற்றின் கரங்களாக இருந்து இயங்கும் சு. நடராஜன், இன்குலாப் போன்றவர்கள் ‘பாசிச எதிர்ப்பு இயக்க’த்தின் பங்காளிகள்.

www.padippakam.com

இ[illegible] எதிர்ப்பு இயக்க’த்தின் பிரதான நாயகரான கிருஷ்ண அய்யருக்கும் தன்னார்வக் குழுக்களுக்கும் உள்ள தொடர்பு பற்றிப் பின்வருமாறு கேடயம்—மனஓசை கும்பல் எழுதியது, ““இந்த சமூக அமைப்பின் மேலேயே நம்பிக்கை வைத்து, தமது பிரச்சினைகளை தமக்குள்ளாகவே தீர்த்துவிட முடியும் என்று நம்பச் செய்கின்றன. அதாவது ஒட்டு மொத்த சமூக மாற்றம் அவசியம் இல்லை என்ற கருத்தை உருவாக்குகின்றன. இதற்காகவே ‘இலவச சட்ட உதவி’ போன்றவற்றை செய்கின்றன.

““இந்த வேலைக்கு இந்திய அதிகார வர்க்கத்தின் ஆட்களை வளைத்துப் போட்டுக்கொள்ளவும் செய்கின்றனர். அப்படித்தான் முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதிகளான பி.என் பகவதி, கிருஷ்ண அய்யர், தேசாய் போன்றோரின் புத்தகத்தை வெளியிடுவது, அவர்களை அழைத்துபொதுக் கூட்டம், கருத்தரங்கு, முகாம்களை நடத்துவது ஆகியவற்றையும் செய்கிறது.’’ மேற்படி



தன்னார்வக் குழுக்களின் மூளையாக இருந்து இயங்கும் ஹென்றி திபங்கே, எஸ்.வி. ராஜதுரை ‘பாசிச எதிர்ப்பு இயக்க’த்தின் பங்காளிகள்.



பாசிச எதிர்ப்பு, ஜனநாயக உரிமைக்கான நாயகர்கள் என இவர்கள் முன்னிறுத்தும் கிருஷ்ண அய்யர், நெடுமாறன் ஆகிய அரசியல்பிழைப்புவாதிகளின் யோக்கியதை இன்னும் கேலிக்குரியது. இன்று ““பாசிச எதிர்ப்புஜனநாயக உரிமை’’ பற்றி சவடால்அடிக்கும் இந்த கிருஷ்ண அய்யர் யார்? ● பாசிச இந்திராவின் தேர்தல் செல்லாது என்று 1975இல் அலகாபாத் தீர்ப்பு வந்தபோது, அதை நிறுத்தி வைத்தும் பாசிச இந்திராவுக்கு ஆதரவாக தீர்ப்பும் அளித்தவர். அதன் மூலம் அவசர நிலை—பாசிச ஆட்சி வருவதற்கும் வந்த பின்னும் துணை போனவர். ● நக்சல்பாரிப் புரட்சியாளர்களான பூமையா, கிஸ்தா கௌடா தூக்கிலிடப்பட்ட மரண தண்டனையை உறுதி செய்தவர். ● ஆயிரக்கணக்கான மக்களைப் படுகொலை செய்து பாசிச இந்திரா அசாமில் தேர்தல் நடத்தியபோது போலிக் கம்யூனிஸ்டுகளோடு சேர்ந்து கொண்டு அதை ஆதரித்தவர். ● சென்ற ஆண்டு ஜனாதிபதி தேர்தலின்போது போலிக் கம்யூனிஸ்டுகளோடு சேர்ந்து கொண்டு பாசிச ராஜீவுக்கு ஏற்பட்ட நெருக்கடியைத் தீர்ப்பதற்கு உதவியவர். ஜனாதிபதிதேர்தலில் வெற்றி பெற முடியாது என்று அறிந்தும் ஜனாதிபதி அதிகாரம் பற்றி பாசிச ராஜீவின் நிலைப்பாட்டை ஆதரித்தவர்.

நெடுமாறன் யார்? ● அவசர நிலை—பாசிச ஆட்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து வந்த காமராஜரின் பழைய காங்கிரசு கட்சியை மூப்பனாரோடு சேர்ந்து கொண்டு பாசிச இந்திராவிடம் அடகுவைத்தவர். அவசரநிலை பாசிச ஆட்சியை ஆதரித்தவர் ● அவசரநிலை ஆட்சிக் கொடுமையைக் கண்டித்து பாசிச இந்திராவுக்கு திமுகவினர் கருப்புக் கொடி காட்டியபோது இந்திராவின் அடியாளாகவிருந்து மாவீரனானவர் ● பாசிச இந்திரா எம்ஜிஆருடன் கூட்டுச் சேராமல் கருணாநிதியுடன் கூட்டுச் சேருவதை எதிர்த்து வெளியேறியவர். அரசியல் பிழைப்புக்காகவே இனப்பிரச்சினை, ஈழ ஆதரவு, ஜனநாயக உரிமை பேசுபவர் ● சென்ற ஆண்டுகூட வீரமணியோடு சேர்ந்து கொண்டு பாசிச எம்ஜிஆருக்குப் பாதந்தாங்கிப் போனவர்.

இப்படித் தொடர்ந்து பாசிச பாதந்தாங்கிகளாக இருந்த கிருஷ்ண அய்யரும் நெடுமாறனும் இப்போது அரசியல் பிழைப்புக்காக ““பாசிச எதிர்ப்பு ஜனநாயக உரிமை’’பற்றிப் பேசுகிறார்கள். வி. பி. சிங், கருணாநிதி போன்ற ஓட்டுப் பொறுக்கிகள் பற்றி எழுதும் போதெல்லாம் அவர்கள் இப்போது என்ன பேசுகிறார்கள் என்பதை வைத்து முடிவு செய்யக் கூடாது; முன்பு என்ன செய்தார்கள் என்று பார்க்கவேண்டும் என்று (வி. பி சிங் பற்றி கேடயம் 1-15 ஜூலை 1988 பக் 5; கருணாநிதி பற்றி பல கேடயம் இதழ்களில்) எழுதுகிறது கேடயம் மனஓசை கும்பல். ஆனால்



படிப்பகம்

www.padippakam.com

கிருஷ்ண அய்யர், நெடுமாறன் விவகாரங்களில் வசதிக்கேற்ப கண்ணை மூடிக்கொள்கிறது.

பதவியிலும் ஆளும் கட்சியிலும் இருக்கும்போது மக்கள் விரோத நிலைப்பாடும், வெளியில் இருக்கும்போது மக்கள் ஆதரவுச் சவடாலும் ஓட்டுப் பொறுக்கிகளுக்கு வழக்கமானதுதான் வி. பி. சிங், கருணாநிதி, நெடுமாறன் போன்றவர்கள் ஓட்டுப் பொறுக்கிகள் என்றால் கிருஷ்ண அய்யர் ஓட்டுப் பொறுக்கிகளிடம் ஓட்டுப் பொறுக்குபவர். அந்த முறையில்தான் கேரள மந்திரியானார்; பிறகு ஜனாதிபதிபதவிக்குப் போட்டியிட்டார்.

## பிரமைகளை உருவாக்கும்! எதிரிகளுக்கு உதவும்!

இந்த மாதிரியான ''கூட்டு'' நடவடிக்கைகள் பாசிச சுயேச்சதிகார சக்திகளை எதிர்க்க முடியாது; ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கவோ பெறவோ உதவாது. வீண் பிரமைகளைத்தான் உருவாக்கும். இது வெறும் சந்தர்ப்பவாதக் ''கூட்டு''. பாசிசத் தாக்குதல் வரும்போது காக்கைக் கூட்டத்தில் கல்லெறிந்தாற்போல சிதறிப்போகும் ''கூட்டு''. ஏனெனில் இந்தக் கூட்டு நடவடிக்கைகளில் பங்கேற்பவர்கள் துரோகிகள், ஓடுகாலிகள், ஏகாதிபத்திய உளவாளிகள், எதிர்ப்புரட்சியாளர்கள், சமூக விரோதிகள் என்று இவற்றின் அமைப்பாளர்களான கேடயம்—மனஓசை கும்பலே ஒப்புக்கொண்டிருக்கிறது. இப்படிப்பட்டவர்களோடு சில பெயர்ப்பலகை அமைப்புகளும், அரசியல்பிழைப்புவாத ஓட்டுப் பொறுக்கிகளும் சேர்ந்துள்ளார்கள்.

முதலாவதாக இந்த மாதிரியான ''கூட்டு'' நடவடிக்கைகள் மார்க்சிய—லெனினியப் புரட்சிகர இயக்கத்தைப் பலப்படுத்துவதற்கு உதாவது —ஏனெனில் எதிரிகள், குறிப்பாக போலிக்கம்யூனிஸ்டுகள் புரட்சிகர இயக்கத்துக்கு அவதூறுகளைப் பரப்புவதற்கு ''ஏற்பாடு'' செய்து கொடுப்பதாகும். ''தேச விரோதிகள், ஏகாதிபத்திய உளவாளிகள், சி. ஐ. ஏ. ஏஜெண்டுகள்'' என்று புரட்சியாளர்களுக்கு எதிராக எதிரிகளும் போலிக் கம்யூனிஸ்டுகளும் அவதூறு செய்கின்றனர். ஆனால் இடையறாத சித்தாந்த, நடைமுறைப் போராட்டங்கள் மூலம் அதை தகர்த்து புரட்சிகர இயக்கம் முன்னேறி வருகிறது. இப்போது புரட்சி வேடதாரிகள், ஏகாதிபத்திய உளவாளிகளான தன்னார்வக் குழுக்கள், மற்றும் புதிய இடதுகளோடு நடத்தும் கூட்டு நடவடிக்கைகளை ஆதாரமாகக் காட்டி மார்க்சிய—லெனினியப் புரட்சிகர இயக்கத்துக்கு எதிராகதொடர்ந்து அவதூறு செய்வதற்கு ''வசதி'' செய்து தருகிறார்கள்.

இரண்டாவதாக, கடந்த சில ஆண்டுகளாக புதிய கலாச்சாரம், செந்தாரகை ஆகியப் பத்திரிக்கைகளின்முயற்சியினால்ஏகாதிபத்திய உளவாளிகளான தன்னார்வக் குழுக்களும்,புதிய இடதுகளும்அம்பலப்படுத்தப்பட்டு,தனிமைப்பட்டு மூலையில் முடங்கிக் கிடந்தார்கள். இப்போது இந்த ''கூட்டு'' நடவடிக்கைகளின் மூலம் அவர்களை உசுப்பிவிட்டு உயிர்ப்பித்து மேடை அமைத்துக் கொடுக்கப்படுகிறது. மீண்டும் அவர்கள் புரட்சிகர அணிகளைக் குழப்பவும் உளவு மற்றும் சீர்குலைவு வேலைகளைத் தொடரவும் ''வசதி'' செய்துதரப்படுகிறது.

## பிரகாசமான சூழ்நிலையில் இருண்ட சக்திகள்

ஆயுத பேர லஞ்ச ஊழல் மற்றும் அரசியல் பொருளாதார நெருக்கடியில் சிக்கிப் பாசிச ராஜீவ் கும்பல் அம்பலப்பட்டுத் தனிமைப் பட்டுப் போயுள்ளது. போலிக் கம்யூனிஸ்டுகள் உட்பட அனைத்து ஓட்டுக் கட்சிகள்மீதும் மக்கள் நம்பிக்கையிழக்கிறார்கள். புரட்சிகர இயக்கத்தை முன்டுப்பதற்கான இந்தப் பிரகாசமான சூழ்நிலையில் அதைத் திசை திருப்பவும் சீர்குலைக்கவும் புறப்பட்டுள்ள இரண்டு இருண்ட சக்திகள்தான் இனவாதிகளும், போலி புரட்சி போலி ஜனநாயகவாதிகளும் ஆவர்.

திராவிட அரசியல் பொறுக்கி அரசியலாகப் பரிணமித்து தமிழக மக்களிடையே அம்பலப்பட்டு நிற்கும்போது மீண்டும் இனவாத அரசியலுக்கு புத்துயிர் ஊட்டப் புறப்பட்டுள்ளார்கள் இனவாதிகள். அதே போல போலிக் கம்யூனிஸ்டுகளின் சந்தர்ப்பவாத ஓட்டுப் பொறுக்கிஅரசியல் அம்பலப்பட்டு புரட்சிகர இயக்கத்தின் பால் மக்களிடையே நம்பிக்கைத் துளிர்த்து வரும் வேளையில் போலிப் புரட்சியாளர்களும், போலி ஜனநாயகவாதிகளும் ஓட்டுப் பொறுக்கி அரசியலில் குதிப்பதற்கான தயாரிப்புக்காகப் புறப்பட்டுள்ளார்கள்.

தற்போது இவ்விரு சக்திகளுக்கும் கிடைத்திருக்கும்''பிரபல''த்தைப் பயன்படுத்திக் கொண்டு மார்க்சிய—லெனினியப் புரட்சிகர இயக்கத்துக்கு எதிரான வேலைகளில் அவர்கள் புது வேகத்தோடு வருவார்கள். புரட்சிகர அணிகள் எச்சரிக்கையாய் இருந்து முறியடிக்க வேண்டும்.

● ஆர்.கே.

## 'சுசி' (SUCI)யின் இரவல் போர்வையைக் கிழித்தெறிந்தீர்கள்!

புதிய ஜனநாயகத்தின் 2வது வெளியீடான இரவல் கம்யூனிசப் போர்வையில் இன்னுமொரு குட்டி முதலாளித்துவக் கும்பலாகச் செயல்படுகின்ற 'சுசி' யைப் பற்றிய அரசியல்—சித்தாந்த விமர்சன ஆய்வைக் கண்டேன். இந்த குட்டி முதலாளித்துவக் கும்பல் பகட்டான ஆங்கில சொற்ஜாலங்களால் சில இளைஞர்களைக் குழப்பிக் கொண்டிருக்கும் இத்தருணத்தில் புதிய ஜனநாயகம்இப்போலிகளின் போர்வையைப் பிடுங்கி எறிந்திருக்கிறது. இந்த 'உண்மையான' (GENUINE) கம்யூனிஸ்டுகளைத் தமிழகத்தில் இடது—வலதுகள் நான்கு வருடங்களாக எரிச்சலோடு பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். சில சந்தர்ப்பங்களில் சேலம், சிவகாசி போன்ற ஊர்களில் தாக்கியும் உள்ளனர். அரசியல்—சித்தாந்தத் துறையில் ஒட்டாண்டித்தனமாக உள்ள இப்போலிகளால், குட்டி முதலாளித்துவ 'சுசி' கும்பலின் அரைவேக்காடு—இரவல் கம்யூனிசப் போர்வையை கிழித்தெறிய முடியாதுதான். இந்தகும்பல் மார்க்சிய—லெனினியப் புரட்சியாளர்களை இடது—வலதுகள் போலக் கருதி தப்புக் கணக்கு போடுகிறது. நம்மிடம் எப்போதாவது விவாதத்திற்கு வரும்போது முன்னுக்குப் பின் முரணாக 'சிப்தாஸ் கோஷ்—இசம்' பேசுகிறது.

ஆனால் மனிதாபிமானத்தின் கல்லறையில் மண்டியிட்டுக் கிடக்கும் காந்திய—ட்ராட்ஸ்கியவாதி திரு. சிப்தாஸ் கோஷின் சிந்தனை அவரது சுயமான சரக்கல்ல; பாட்டாளி வர்க்க எதிரிகளிடமிருந்து இரவல் வாங்கிய சரக்குதான் என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளீர்கள்.

புரட்சியை சாதிக்கத்துடிக்கும் சில இளைஞர்கள் 'சுசி'யின்எத்து வேலைகள் புரியாமல் இக்குட்டி முதலாளித்துவக் கும்பலின் பின்னே அணிதிரள்கிறார்கள். அவர்கள் மார்க்சிய—லெனினிய மாவோ சிந்தனையின் ஒளியில் 'சுசி'யின் இரவல் சரக்குகளை ஆய்வு செய்யவும் அதன்மூலம் தவறுகளைக் களைந்து புரட்சிப் பாதைக்குத் திரும்பவும் கோருகிறேன்.

—வதிலை காளிதாசன்

'சுசி (SUCI)
இரவல் கம்யூனிசப் போர்வையில் இன்னுமொரு குட்டி முதலாளித்துவ கும்பல்'
விலை ரூ 2. தபால் செலவு ரூ 1


ஆசிரியரும் வெளியிடுபவரும்: எஸ். மதியழகன், 21, பாலாஜிசிங் தெரு, சைதாப்பேட்டை, சென்னை-600 015.
அச்சிடுபவர்: எம்.கே. சாமி, பிரேம் பிரஸ், 107-ஏ, பெரியார் பாதை (மேற்கு), சென்னை-600 094.

படிப்பகம்

www.padippakam.com

### ... தாக்குதல்
### பருத்திப் பயிர் நாசம் அரசின் அலட்சியம்

# வேதனையின் விளிம்பில் விவசாயிகள்

வீடும் வயலும் என்ற தலைப்பில் வானொலியில் உழவர்களுக்கு தினமும் நவீன விவசாய கல்வி புகட்டுவதை நீங்கள் கேட்டிருக்க வாய்ப்புண்டு. நாடகம், கதை, பாடல், உரையாடல், கேள்வி பதில் இப்படி பல வடிவங்களில் நவீன விவசாயத்தின் அவசியத்தை தேனொழுக சொல்வார்கள். இவர்களின் ஆலோசனையை நடைமுறைப்படுத்திய விவசாயிகள் மகசூலில் பெரும் சாதனையை நிகழ்த்தி வாழ்க்கையில் இரட்டிப்பு சந்தோஷத்தில் மிதந்துக் கொண்டிருப்பதாக கதை சொல்வார்கள்.

இதோ, மதுரை மாவட்டத்தில் பல பத்தாயிரம் விவசாயிகள் கடந்த 3 மாத காலமாக தங்கள் பருத்தி சாகுபடியை அழிக்கும் வெள்ளைப் பூச்சியை ஒழிக்க பூச்சி மருந்தைக் கேட்டு அரசாங்கத்திடம் கையேந்தி கொண்டிருக்கிறார்கள். கடனாகவோ, மான்யமாகவோ அல்ல; கைமேல் காசு கொடுத்துதான் கேட்கிறார்கள். பல மாத கால மௌனத்திற்குப் பிறகு இப்போது அப்பூச்சியை ஒழிக்க மருந்தே இல்லையென கையை விரித்து விட்டது அரசாங்கம்.

இரண்டு ஆண்டுகால கடுமையான வறட்சிக்குப் பிறகு சென்ற ஆண்டின் சொற்ப மழையை நம்பி, பருவம் தவறி நெல் நடவு நட்டு, கதிர் வரும் நேரத்தில் தண்ணீர் இல்லாமல் சரியான மகசூல் இல்லாமல் கடனாளியானார்கள் விவசாயிகள். பருத்தி நட்டாவது பெற்ற கடனை அடைத்துவிடலாம் என்ற நியாயமான ஆசையால், கடன் மேல் கடன் வாங்கி பருத்தி பயிரை கண் போல் காத்தனர். ஆயிரமாயிரம் கனவுகளை நெஞ்சில் சுமந்து கொண்டு, வாயைக் கட்டி வயிற்றை கட்டி பருத்திக்கு காலாகாலத்தில் உரம் பூச்சிமருந்து போட்டனர்.

பலன் வரும் நாள் நெருங்கியது. மகசூலை பெரும் நம்பிக்கையுடன் எதிர்பார்த்திருந்த விவசாயிகளுக்கு இடியென வந்து இறங்கியது ஒரு சோகம். பூவிடும் நேரத்தில் பருத்தி செடியை 'வெள்ளைப் பூச்சி' என்ற நோய் தாக்கியது. வெல்லத்தில் மொய்க்கும் ஈக்கள் மாதிரி கண்ணுக்குத் தெரியாத சிறு சிறு பூச்சிகள் ஆயிரக்கணக்கில் செடியின் சத்தை உறிஞ்சியதால் பூவே வெளியில் வரவில்லை. தொழு நோயால் பாதித்த மனிதனின் உடல் அங்கங்கள் மாதிரி குருத்து இலைகளும், மொட்டுகளும் சிறுத்து இற்று விழுந்தன.

கடுமையான நோயினால் வதைபடும் தம் குழந்தைக்கு மருத்துவம் பார்ப்பதற்கு மேலும் கீழும் பார்க்கும் விவசாயிகள், வெள்ளைப் பூச்சியை ஒழிக்க 10 'பைசா' வட்டிக்கெல்லாம் கடன் வாங்கி மருந்து தெளித்தனர். சாதாரண மருந்திலிருந்து வீரியமுள்ள பூச்சி மருந்துவரை வேளாண்மை அதிகாரிகள், வியாபாரிகள் எதை எதை சிபாரிசு செய்கிறார்களோ அனைத்தையும் வாங்கி தெளித்தனர். எந்தமருந்துக்கும் வெள்ளைப் பூச்சி ஒழியவில்லை. ஆத்திரம் அடைந்த விவசாயிகள் பூச்சி மருந்து விற்ற கடைகளை முற்றுகை இட்டார்கள். வியாபாரிகள் "நாங்கள் என்ன செய்வது? அரசாங்கம்சிபாரிசு செய்த பூச்சி மருந்துகளைத்தான் வாங்கி விற்கிறோம். எங்களுக்கு பூச்சி மருந்துகளை சோதனை செய்து வாங்கும் அதிகாரம் இல்லை" என்று பதிலளித்தனர். பாதிக்கப்பட்ட விவசாயிகள், கிராமங்களுக்கு பூச்சி மருந்து விளம்பரம் செய்யவரும் ஜீப், வேன்களை மறித்து "பவர் (வீரியம்) இல்லாத மருந்துகளை எங்கள் தலையில் கட்ட வருகிறீர்களா" என்று ஊரில் நுழையவிடாமல் வெஞ்சினத்தோடு விரட்டினார்கள். சுகமாக நகரங்களில் வசிக்கும் வேளாண்மை அதிகாரிகளோ எதையும் காதில் போட்டுக் கொள்ளாமல் எருமை மாட்டின் மீது மழை பொழிந்த மாதிரி இருந்தனர்.

வெள்ளைப் பூச்சியால் தாக்குண்ட பருத்திச் செடிகள்.



திரும்பவும், அப்பகுதி விவசாயிகள் எல்லாம் ஒன்று திரண்டு மதுரை மாவட்டக் கலெக்டரைப் பார்த்து மனுக் கொடுத்தனர்.

கலெக்டரோ 'இந்த வெள்ளைப் பூச்சியை ஒழிக்க இந்த ஆண்டு மருந்து கிடையாது. அடுத்த ஆண்டுதான் கிடைக்கும்' என திமிராக பதில் கூறி திருப்பி அனுப்பினார்.

பருத்தி விவசாயம் செல்லரித்த நிலையில் விவசாயிகளுக்கு கடன் கொடுத்தவர்கள் கடனை திருப்பிக் கேட்டு நெருக்குகின்றனர். கூலி ஏழை விவசாயிகள் வேலை கிடைக்காமல் திரும்பவும் அண்டை நகரங்களுக்கு படையெடுக்கின்றனர். நடுத்தர விவசாயிகளோ மீள முடியாத கடனில் மாட்டிக் கொண்டு அவமானம் தாங்க முடியாமல் தற்கொலைக்கு முயலும் கட்டத்தை அடைந்துள்ளனர். பல ஆண்டுகள் வறட்சிக்குப் பிறகு இந்த ஆண்டாவது தம் மகளை மணக்கோலத்தில் பார்க்கலாம் என நினைத்தவர்கள் நம்பிக் கையற்று தினமும் சிறுக சிறுக செத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இதே ஆண்டின் துவக்கத்தில் ஆந்திர மாநிலம் பிரகாசம் மாவட்டில் இதே கொடுமைக்கு உள்ளானார்கள் விவசாயிகள். வெள்ளைப் பூச்சி தாக்குதலிலிருந்து பருத்தி செடியைக் காக்க மீளமுடியாத கடனில் மூழ்கினார்கள். பலன் ஏதும் இல்லாமல் கடன் தொல்லையால் பல பத்துக்கணக்கான விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டனர். இன்று தமிழகம் இன்னொரு ஆந்திராவாக மாறிவருகிறது.

பாதிக்கப்பட்ட விவசாயிகள் 'ஆண்டவன் விட்ட வழி' என்று தலைவிதியை நொந்து கொண்டு சோர்ந்து விடுவதில் பயன் இல்லை. வீரியமற்ற பூச்சி மருந்துகளை தயாரித்து தலையில் கட்டிய மோசடி நிறுவனங்களும் அந்நிறுவனங்களுக்கு அனுமதியளித்த அரசாங்கத்திடமும் முழு நட்டஈடு கோரி போராட வேண்டும்.

சொந்த நாட்டு மக்களை தற்கொலையில் தள்ளிவிட்டு, நாளொன்றுக்கு லட்ச ரூபாய் செலவு செய்து நவீன விஞ்ஞானத்தின் துணையுடன் தன் உயிரை மட்டும் பாதுகாத்துக் கொள்ளும் பாசிச ராஜீவ் கும்பலை வேரோடும் வேரடி மண்ணோடும் தூக்கியெறியும் போராட்டத்தில் மற்ற பிரிவு உழைக்கும் மக்களுடன் ஒன்றிணைய வேண்டும்.

—உசிலை வட்ட விவசாயிகள் விடுதலை முன்னணி



படிப்பகம்

www.padippakam.com



# இதுதான் இன்றைய இந்தியா

இத்தாலிய மருமகன், இந்தியாவின் இளைய பிரதமர் ராஜீவ் காந்திக்கும் அவரது சகபாடிகளுக்கும் சுதேசிப் பொருட்களைப் பார்த்தாலே வேப்பங்காயாகக் கசக்கிறது. எனவே, முதல் கட்டமாக இங்கு படத்திலிருக்கும் படகு போன்ற அதிநவீன குளுகுளு கார்களை வெளி நாடுகளிலிருந்து அரசே இறக்குமதி செய்து விற்பனையை வேகமாக முடுக்கி விட்டுள்ளது. இதற்கு தடையாக இருந்த சட்ட சிக்கல்களை உடைத்தெறிந்து தன்னுடைய சகபாடிகளின் நெஞ்சங்களை குளிர வைத்து விட்டார் பிரதமர் ராஜீவ்.

18 லட்ச ரூபாய் விலை மதிப்புடைய மெர்சிடீஸ் 230 எஸ். இ என்ற அதிநவீன 'மாட'லிலிருந்து ஹோண்டா, டையோட்டா, ரஷியாவின் லடா இப்படி பல மாடல்களில், 7 லட்ச ரூபாயிலிருந்து 20 லட்சம் ரூபாய் வரை இனி எந்த வெளிநாட்டு கார் வேண்டுமென்றாலும் இந்திய அரசாங்கத்தை அணுகலாம். அது, தனது வர்த்தக கழகத்தின் மூலம் வாங்கி கொடுக்கும்.

இதோ, கோவில் வாசல்களில் பிச்சை எடுக்க காத்திருக்கும் கூட்டம் மாதிரி அமர்ந்திருக்கும் இவர்கள் அனைவரும் நோயாளிகள். நடைபாதையில் இருக்கும் இலவச மருத்துவமனை இது. கல்கத்தா மாநிலம் மிட்டல்டான் ரோ என்ற பகுதியில்தான் இந்த அவலம். ஐந்து ஆண்டுகளுக்கு முன் இந்தியாவிற்கு வந்த இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த 57 வயது ஜான் பிரேய்ஜர் என்னும் மருத்துவர் இந்திய மக்களின் அவல நிலையை பார்த்து வந்த இடத்திலேயே தங்கி விட்டார். கல்கத்தா நகரத்தில் வசிக்கும் ஏழை எளிய மக்களுக்கு தம்மாலான மருத்துவ சேவை செய்யவும் இந்தியாவில்தான் தங்கவும், மருத்துவமனைக்கு உதவியும் கேட்டு அரசிடம் மனு செய்தார். அரசு இவரது கோரிக்கையைத் தொடர்ந்து மறுக்கவே, போராட்டங்களுக்கு மத்தியில் போக்குவரத்து அற்ற நடைபாதையில் தனது இலவச மருத்துவ சேவையை கடந்த 3 ஆண்டுகளாக தொடர்கிறார். தினமும் காலை 9 மணி முதல் மாலை மூணு மணி வரை பல நூற்றுக் கணக்கான நோயாளிகள் கொளுத்தும் வெய்யிலில் வீதியில் அமர்ந்து இவரிடம் இலவசமாக மருத்துவம் பார்த்துச் செல்கின்றனர்.

இந்திய நாட்டை ஆளும் விதேசி கும்பலுக்கு உள்ளங்கால் முதல் உச்சந்தலை வரை உபயோகிக்கும் பொருட்களும், உணவு வகையிலிருந்து உல்லாச பயணம் வரை அனைத்திற்கும் இறக்குமதி செய்யப்பட்ட அதிநவீன வகைகள். இதற்காக அரசியல் சட்டத்தில் ஆயிரத்தெட்டு திருத்தங்கள். ஆனால், இந்திய நாட்டின் மண்ணின் மைந்தர்களோ உயிர்வாழும் உரிமையும் இன்றி நடைபிணமாய் திரிகிறார்கள். உணவு, உடை, இருப்பிடம், மருத்துவம் போன்ற அடிப்படை தேவைகளுக்கும் பிறரிடம் கையேந்தி நிற்கிறார்கள்.

இந்த ஒட்டுண்ணி கும்பல்களை ஒழித்துக் கட்டுவது எப்போது?





படிப்பகம்